Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, SEPTEMBER 13, 2021

திங்கட்கிழமை செப்டெம்பர் 13, 2021 | ஒளி: 07 கதிர்: 99 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## சஹ்ரானுடன் சகவாசம்; மற்றுமொருவர் கைது

■ கனகராசா சரவணன்

உயித்த ஞாயிறுத் தற்கொலை குண்டுதாக்குதலில் உயிரிழந்த பிரதான சூத்திரயான சஹ்ரானுடன் தொடர்பை பேணிவந்தார் என்ற குற்றச்சாட்டில் பொலன்னறுவை, தம்பானை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

கொக்குத் தொடுவாய், பூமடுகண்டலில் நில அபகரிப்பு

# களத்தில் இறங்கி தடுக்கப்பட்டது





■ விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவுடு, கரைதுறைபற்றுப் பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட, கொக்குத்தொடுவாய் பூமடுகண்டல் பகுதியிலுள்ள தமிழ் மக்களின் பூர்வீக வயல் நிலங்களை, வெலிஓயா பகுதியிலுள்ள பெரும்பான்மை இனத்தவர்கள் அபகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

பெரும்பான்மை இனத்தவர்களின் அபகரிப்பு முயற்சியை முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் நேற்று (12) தடுத்து நிறுத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2



பொருளாதாரத்தை வலுப்படுத்தல்

## ஏற்றுமதியில் தங்கியுள்ளது

### நிதியமைச்சர் தெரிவிப்பு

பொருளாதாரத்தை மேம்படுத்துவது ஜனாதிபதியினதும், அரசாங்கத்தினதும் இலக்காகும் என்பதுடன், அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்த நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ, ஏற்றுமதி துறையை வலுப்படுத்தினால் பொருளாதாரத்தை பலப்படுத்த முடியும் என்றார்.

தொடர்ச்சி P2

## சொத்துகளை அபகரிக்கவே தொழிலாளர் இல்லத்துக்கு சேதம்




பெருந்தோட்ட மலையக மக்களின் சொத்துகளை அபகரிக்கும் நோக்கிலேயே இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் 'தொழிலாளர் இல்லம்' சேதமாக்கப்பட்டதாக அதன் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார் .

தொடர்ச்சி P2

## ஒரு நாளைக்கு இரண்டுவேளையாக உணவைக் குறைக்கவும்

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய ஒருமாத சம்பளத்தை கொவிட் நிதியத்துக்கு கொடுத்துள்ளனர் எனத் தெரிவித்துள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகத் குமார சுமித்ஆராச்சி, ஒரு நாளைக்கு மூன்று வேளை உண்பவர்கள் இரண்டு வேளை உணவை குறைக்க வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2



## உள்ளாடைகளை தூக்கியுள்ளனர்



இறக்குமதி செய்யப்படும் 623 அத்தியாவசியமற்ற பொருட்களின் உத்தரவாத தொகை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், இதில் பல பொருட்கள் காணப்பட்டாலும், எதிர் தரப்பினர் தங்களின் அரசியல் பிரசாரத்துக்காக உள்ளாடையை மாத்திரம் தெரிவு செய்துள்ளார்கள் என காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## விசேட தேவையுடைய சிறுவர்களுக்கு பைசர்




ஒக்டோபர் மாதத்தில் 4 மில்லியன் பைசர் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன எனத் தெரிவித்த ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன விசேட தேவையுடைய சிறுவர்களுக்கு அடுத்த வாரம் முதல் பைசர் தடுப்பூசி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

## மதுபான விற்பனைக்கு அனுமதி




தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது. எனினும், தெரிவு செய்யப்பட்ட சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் விசேட அனுமதிப்பத்திரம் கொண்ட இடங்களில் மதுபான விற்பனைக்கு மதுவரி திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## கோட்டாவின் ஆட்சியில் ஒடுக்குமுறைகள் இல்லை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் ஒடுக்குமுறைகள் முன்னெடுக்கப்படாது எனத் தெரிவித்துள்ள நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, ஒடுக்குவதற்காக அல்ல; மக்களுக்கு சாதாரண விலையில் பொருள்களை பெற்றுக்கொள்ள தான் அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

## குழப்பங்கள் குறித்து ஆராய்கிறது டெலோ

■ கே.எல்.ரீ.யுதாஜித்



தமிழ்த் தேசிய பரப்பில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்கள் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் பிளவு ஏற்படவுள்ளதாக வெளியாகின்ற கருத்துகள் தொடர்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) தலைமைக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஆழ்கடலில் நிலநடுக்கம்

இலங்கையின் தெற்கே ஹம்பாந்தோட்டையில் இருந்து 160 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஆழ்கடலில் 4.1 மெக்னிடியூட்டில் அளவிலான நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என்று புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது.



தொடர்ச்சி P2

12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு


## இம்மாத இறுதி வாரத்தில் ஆரம்பம்



12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையை இம்மாதம் இறுதி வாரத்தில் ஆரம்பிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

## புதுக்குடியிருப்புக்குள் புகுந்தது டெல்டா



முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் டெல்டா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் ஐவர் இனம் காணப்பட்டுள்ளனர்.

அங்கு கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான பலரிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகள் ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

60 வயதுக்கு மேற்பட்டோரில்

## 1,38,000 பேர் தடுப்பூசியை செலுத்திக் கொள்ளவில்லை



12 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்டோருக்கு கொரோனா தடுப்பூசியை செலுத்தும் செயற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் நிலையில், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் பலர் இன்னும் ஒரு தடுப்பூசியையேனும் செலுத்திக்கொள்ளவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# களத்தில் இறங்கி தடுக்கப்பட்டது

அத்தோடு குறித்த காணிப் பிரச்சினை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டசெயலகத்தில் பிறிதொருநாளில் கலந்துரையாடல் மேற்கொள்வது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் அறியவருகையில்,

கொக்குத்தொடுவாய், பூமடுகண்டல் பகுதி என்பது தமிழர்களுடைய பூர்வீக மானாவாரி வயல் நிலங்களாகும்.

கொக்குத் தொடுவாய் மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு தமது பகுதிகளிலிருந்து இடம்பெயரும் வரையில் பூமடு கண்டல் பகுதியில் 420ஏக்கருக்கும் மேற்பட்ட வயல்நிலங்களில் நெற்பயிற்செய்கை மேற்கொண்டுவந்திருந்தனர்.

இந் நிலையில் நீண்டகால இடப்பெயர்வின் பிற்பாடு கடந்த 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொக்குத் தொடுவாய் பகுதியைச்சேர்ந்த தமிழர்கள், அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

இவ்வாறு மீள் குடியமர்த்தப்பட்ட பிற்பாடு பூமடுகண்டல் பகுதியில் 138ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்களில் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்திருந்தனர்.

இந் நிலையில் தற்போது அப் பகுதியில் பெரும்போக மானாவாரி நெற்பயிற்செய்கைக்கான ஆயத்தப்பணிகளில், வயல்நிலங்களுக்குரிய தமிழ் மக்கள் ஈடுபடும்போது, வெலி ஓயா பகுதியைச்சேர்ந்த பெரும்பாண்மை இனத்தவர்கள் அதற்கு இடையூறு விளைவிப்பதுடன், குறித்த விவசாய நிலங்களில் தாம் பயிற்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முனைப்புக்களில் ஈடுபட்டிருந்தனர்.

இந் நிலையில் இது தொடர்பில் அப்பகுதித் தமிழ் மக்கள் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரிடம் முறையிட்டிருந்தனர்.

அதற்கமைய 12.09.2021இன்று குறித்த பகுதிக்குச்சென்ற முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் மற்றும், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் நிலைமைகளை ஆராய்ந்தனர்.

அப்போது அங்கு பெரும்பான்மை இனத்தவர்கள் பலர் தமிழ் மக்களின் குறித்த பூர்வீக வயல்நிலங்களை அபகரிக்கும் முயற்சியில் துப்பரவுப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறு அபகரிப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்த பெரும்பான்மை இனத்தவர்களுக்கும், அங்கு சென்ற தமிழ்மக்கள் பிரதிநிதிகள் மற்றும் தமிழ் மக்களுக்குமிடையில் வாய்த்தர்கங்கள் இடம்பெற்றதுடன், அபகரிப்பு முயற்சி தடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அப் பகுதிக்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் வருகைதந்திருந்தார். குறித்த உத்தியோகத்தருக்கும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இவ்வாறு இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து, பிறிதொருநாளில் மாவட்டசெயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலர் தலைமையில் குறித்த காணிப் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வது என்ற முடிவும் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சஹ்ரானுடன் சகவாசம்; மற்றுமொருவர் கைது

பயங்கரவாத குற்ற தடுப்பு பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவ்வாறு தொடர்பை பேணி வந்த அந்நபரை, கடந்த 8ஆம் திகதியன்று அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஏற்றுமதியில் தங்கியுள்ளது

அந்நிய செலாவணி தொடர்பான ஜனாதிபதி செயலணியுடன், அலரி மாளிகையில் இடம் பெற்ற மீளாய்வு கூட்டத்தில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

வெளிநாட்டு தொழிற் சந்தையில் இலங்கையர்களுக்கு அதிக கேள்வி காணப்படுகிறது. தொழில்வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு தடையாக உள்ள விடயங்கள் குறித்து ஆராய்வது அவசியமாகும்.தற்போது வெளிநாடு செல்வதற்கு எதிர்பார்த்துள்ள தொழிலாளர்கள் எதிர்க் கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது அவசியமாகும் என்றார்.

நாட்டுக்கு அந்திய செலாவணியை அதிகளவில் ஈட்டித்தரும் வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர் எதிர்க்கொள்ளும் பிரச்சினைகளுக்கு, உரிய தீர்வு வழங்குவது உரிய தரப்பினரது பொறுப்பாகும்.

தேசிய மட்டத்திலான உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல் மற்றும் சேவை விநியோகத்தினால் அந்திய செலாவணியை பெற்றுக் கொள்வதில் கடந்த ஒகஸ்ட் மாதம் வரை முன்னேற்றம் காணப்படுகிறது. அந்நிய செலாவணியை தொடர்ந்து வலுப்படுத்திக் கொள்வது குறித்து இப்பேச்சுவார்த்தையில் அதிக கவனம் செலுத்தப்பட்டன.

கடந்த வருடம் சந்தை பொருட்கள் ஏற்றுமதியினால் ஒரு மாதத்திற்கு 840 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாய் கிடைக்கப்பெற்றுள்ளது. நிறைவடைந்த 8 மாத காலப்பகுதியில் இத்தொகை 986 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளன.

கொரோனா தாக்கத்துக்கு மத்தியில், இறப்பர் மற்றும் இறப்பர் சார் உற்பத்திகள், பொறியியல் துறை உற்பத்திகளின் ஏற்றுமதி முன்னேற்றமடைந்துள்ளன. ஏற்றுமதி துறையினால் நிறைவடைந்த எட்டு மாத காலத்தில்7,886 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளன என்றார்.

## சொத்துகளை அபகரிக்கவே தொழிலாளர் இல்லத்துக்கு சேதம்

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமை இல்லத்தை பலவந்தமாக கைப்பற்றுவதற்கும் தொழிலாளர்களின் சொத்துக்களை சூறையாடும் நோக்கிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு சிலர் முயற்சித்து வருகின்றனர் என்றார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துரைக்கையில்,

ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வுக்குப் பின்னதாக மலையக மக்கள் தொடர்ந்தும் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு பக்கபலமாக அவர்களுடைய தொழில் பாதுகாப்பை உறுதி செய்யும் விதத்தில் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில், தமது சங்கத்துக்குச் சொந்தமான சொத்துக்களையும் சங்கத்தின் தலைமை இல்லத்தையும் அபகரிக்கும் நோக்குடன், மக்களால் நிராகரிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு சில முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கதவுகளை உடைத்து அத்துமீறி உட்புகுந்து அங்கிருக்கும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தி இருக்கின்றார்கள்.

தொழிற்சங்கத்தின் அலுவலகத்தை அவர்கள் பொறுப்பேற்பதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தால் சட்டரீதியாக அலுவலகத்தை பொறுப்பேற்க முடியும். அதனை தவிர்த்து திருடர்கள் போல் உட்புகுந்து தொழிலாளர்களில் சொத்தை சுவீகரித்துக் கொள்வதற்கு திட்டம் தீட்டி உள்ளார்கள்.

இன்று எங்களுடைய உயிரையும் பணயம் வைத்து மக்களின் சொத்துக்களை காப்பாற்றிருக்கின்றோம். இந்த சங்கத்தின் பொதுச்செயலாளராக தான் இருக்கும் வரையில், மலையக மக்களின் சொத்தை சூறையாடுவதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டேன் என தெரிவித்துள்ள வடிவேல் சுரேஸ், கொழும்பு மேல் நீதிமன்றம் சரியான தீர்ப்பை வழங்கும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் மேற்படி விடயம் தொடர்பாக ராஜகிரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றோம் என்றார்.

## உள்ளாடைகளை தூக்கியுள்ளனர்

உள்ளாடை இறக்குமதி தடை செய்தமைக்கு நாட்டு மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பல பிரச்சினைகள் காணப்படுகின்ற போது எதிர்தத்ரப்பினர் தங்களின் அரசியல் பிரசாரத்திற்காக உள்ளாடை விவகாரத்திற்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இவர்களுக்கு மக்கள் தேர்தலின் போது தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்றார்.

நல்லாட்சி அரசாங்கம் தேசிய உற்பத்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. வீட்டை சுத்தம் செய்யும் தும்புத்தடியை கூடி பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்தது.

தேசிய பொருளாதாரத்தை முழுமையாக இல்லாதொழிப்பது ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தின் பிரதான எதிர்பார்ப்பாக காணப்பட்டது என்றார்.

2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து இறக்குமதி செய்யப்பட்ட பல பொருள்கள் தடை செய்யப்பட்டன. இதனால் தேசிய உற்பத்தியாளர்கள் உற்பத்தி துறையில் முன்னேற்றமடைந்தார்கள். எனவே, தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக ஜனாதிபதி பிரத்தியேகமாக இராஜாங்க அமைச்சுகளையும் ஸ்தாபித்துள்ளார் என்றார்.

## விசேட தேவையுடைய...

இந்த தடுப்பூசிகளை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கான விசேட நிபுணர் குழுவின் பரிந்துரைகளை எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விசேட தேவையுடைய சிறுவர்களுக்கு தடுப்பூசியை வழங்குவதற்கான பரிந்துரை கிடைத்துள்ளன. அடுத்த வாரம் முதல் தடுப்பூசிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

## ஆழ்கடலில் நிலநடுக்கம்

எனினும் இந்த நில நடுக்கத்தால் இலங்கைக்கு சுனாமி அச்சுறுத்தல் இல்லை என்றும் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் லுணுகம்வேஹர எனுமிடத்தில் அண்மைய காலங்களில் இரண்டு தடவைகள் நிலம் அதிர்ந்துள்ளமை பதிவாகியிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஒரு நாளைக்கு இரண்டு வேளையாக உணவைக் குறைக்கவும்

கொரோனா வைரஸின் விளைவாக பொதுமக்கள் தற்போது கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவித்த ஜகத் குமார இதன் விளைவாக, சில தியாகங்கள் செய்யப்பட வேண்டும் என்றார்.

சில தியாகங்களைச் செய்வது, நாட்டை எதிர்காலத்தில் மீட்க உதவும் என்றும் அவர் மேலும் தெரவித்தார்.

## குழப்பங்கள் குறித்து ஆராய்கிறது டெலோ

அதன் மத்தியகுழு எதிர்வரும் 18 ஆம் திகதி கூடி ஆராயவிருக்கிறது என்று இயக்கத்தின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு தமிழ்த் தேசிய பரப்பிலிருந்து பல முனைகளிலும் கடிதங்கள் எழுப்பட்டுள்ளன. இருந்தாலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினாலும் அதன் அங்கத்துவக் கட்சிகளினாலும் எழுதப்பட்ட கடிதங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் பல குழப்பங்கள் உள்ளன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிளவடைந்துவிட்டது என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிளவடையாது என்றும் கருத்துகள் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கையில் ஒரு கட்சியினரை மற்றொரு கட்சியினர் வசைபாடிக் கொண்டும் இருக்கின்றனர். இந்த வேளையில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழுக் கூட்டம் மெய்நிகர் வழியாக நேற்று முன்தினம் தினம் (11) நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இக் கருத்து கள் சம்பந்தமாக நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டு இந்தக் குழப்பத்திற்கு முடிவுகாண்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

## மதுபான விற்பனைக்கு...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட புதிய சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என மதுவரி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார். இந்த அனுமதியானது, தெரிவு செய்யப்பட்ட ஹோட்டல்களில் தங்கியுள்ள வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

தனிமைப்படுத்தல் காலப்பகுதியில் உயிர் குமிழி முறைமையை பின்பற்றும் முதலாம் மற்றும் இரண்டாம் தரங்களிலுள்ள ஹோட்டல்களில் மது பாவனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது..

## கோட்டாவின் ஆட்சியில் ஒடுக்குமுறைகள் இல்லை

ஆட்களை கொல்லுதல், கடத்தல்,கடத்தி முதலைகளுக்கு இறையாக்குதல் போன்ற ஒடுக்குமுறைகள் ஏற்படும் என தேர்தல் மேடைகளில் ஜனாதிபதிக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டாலும் இன்று அவை பொய்யாகியுள்ளன என்றார்.

முழு உலகமும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த நாட்டின் கறுப்பு கடை காரர்கள் இந்த சந்தர்ப்பத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கிக்கொண்டு,அதிக விலைக்கு பொருள்களை விற்பதைத் தடுக்க தான் இந்த அவசரகாலச் சட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

விரும்பமின்றியாவது அவசரகால சட்டத்தை கொண்டு வந்து, இதனைக் கட்டுப்படுத்த வேண்டும். கட்டுப்படுத்தாவிட்டால் மக்கள் சுரண்டப்படும் காலம் உருவாகும். அதனை நாம் எம் கண்களால் அவதானிக்கிறோம். என்றார்.

இதேவேளை மத்திய அதிவேக நெடுஞ்சாலை பணிகள், 9 மாதங்களுக்கு முன்னரே நிறைவடைந்திருக்க வேண்டும். ஆனால் கடந்த அரசாங்கம் அவர்களது நண்பர்கள் அமைச்சர்களுக்கு ஒப்பந்தங்களை வழங்கியதால் தான் இத முழுமையாக தாமதமடைந்தது.

அப்படி நடந்திருந்தால் இந்த நாட்டு மக்கள் 2 மாதங்களுக்கு முன்னரே மத்திய அதிவேக வீதியை பயன்படுத்த தொடங்கியிருப்பர்.

நாம் எப்போதும் சரியான தீர்வைத் தான் எடுப்போம் . நாம் அரசியல் பழிவாங்கல்களுக்கு செல்லவில்லை. நாம் அப்படி அரசியல் பழிவாங்கலுக்குச் சென்றிருந்தால், தவறு செய்தவர்கள் சிறையில் தான் இருந்திருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## இம்மாத இறுதி...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரின் தலைமையில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

“முதலாவது கட்டத்தில் 35,000 சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது” என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஜீ.விஜேசூரிய தெரிவித்தார்.

50-இற்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளை திறப்பதற்கும் அந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்த தீர்மானங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி தலைமையில், கடந்த வெள்ளிக்கிழமை (10) நடைபெற்ற கொவிட்-19 ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தில், 100 மாணவர்களிலும் குறைவானோர் காணப்படும் 3,000க்கும் அதிகமான பாடசாலைகள், கிராமங்களில் வியாபித்திருக்கின்றன. ஆதனால், அவ்வாறான பாடசாலைகளைத் திறப்பது தொடர்பில் காணப்படும் இயலுமை தொடர்பில் உடனடிப் பரிந்துரைகளை முன்வைக்கும் பொறுப்பு, சுகாதார மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் உள்ளடங்களான தொழில்நுட்பக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## புதுக்குடியிருப்புக்குள் புகுந்தது..

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 5 பேரின் மாதிரிகளில் டெல்டா வைரஸ் தொற்று இனம் காணப்பட்டுள்ளது. அதில், இரண்டு பொலிஸார் அடங்குகின்றனர். ஏனைய மூவரும் பிரதேசவாசிகள் ஆவர்.

இந்நிலையில், வடமாகாணத்தில் 113 பேருக்கு டெல்டா வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகையால், மக்கள் சுய சுகாதார பாதுகாப்புடன் இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார துறையினரின் அறிவுறுத்தல்களை பின்பற்றாத பலரை புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் காணமுடிந்துள்ளது. என்பதுடன், சுகாதார வழிமுறைகளை பின்பற்றுமாறும் சுகாதார துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

## 1,38,000 பேர் தடுப்பூசியை...

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கொரோனா தொற்றில் மரணிப்போரில் பெரும்பாலானவர்கள் 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் என்பது புள்ளிவிவரத் தகவல்களின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே மேற்கண்ட தகவலும் வெளியாகியுள்ளது.

பிரதேச செயலக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் இது கண்டறியப்பட்டதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் என்.எம்.எம். சித்ராநந்த தெரிவித்தார்.

“ஜனாதிபதி செயலணியின் ஆலோசனைக்கு அமைவாக, தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாத 60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தடுப்பூசியை பெறாத 60 வயதுக்கும் மேற்பட்டவர்களில் அதிகமானவர்கள் குருநாகல் மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிணங்க, தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு உடனடியாக தடுப்பூசியை வழங்குவதற்கு பிரதேச செயலாளர்களின் ஊடாக கிராம உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# குடியுரிமை பாடத்திட்டத்தினுள் சட்டக் கல்வியை உள்ளீர்க்கவும்



நாட்டுக்கு அவசியமான புதிய தேசிய கல்விக் கொள்கை தயாரிக்கப்பட்டு வருப்பதாக சபை முதல்வர், கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற கல்வி அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலைகளில் நிலவும் அதிபர் பற்றாக்குறைக்கு உரிய நடைமுறையொன்று விரைவில் தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

தற்பொழுது ஏற்பட்டுள்ள ஆசிரியர் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பது பாரிய சிக்கலாக மாறியுள்ளது எனக் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஆசிரியர்களின் பணியிடத் தெரிவு தொடர்பான வேலைத்திட்டம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் எனவும் இதன்போது தெரிவித்துள்ளார்.

கல்வியியல் கல்லூரிகளை பல்கலைக்கழகமாக மாற்றும் திட்டம் நடந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்க மொழிகள் வீழ்ச்சியுறும் நிலைக்குச் சென்றிருப்பதாக அமைச்சர் வாசுதேவ நாணயகார சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக இணைந்து அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கருத்துத் தெரிவித்தோடு, தற்பொழுது ஆங்கிலம் கல்வி மொழியாகிவருவது தொடர்பிலும் அவர் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதேவேளை, இலங்கை சட்டத்தை ஒரு பாடமாக பாடசாலைப் பாடத்திட்டத்தில் உள்வாங்குவதற்கான தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை 02 வாரங்களுக்குள் உபகுழுவிடம் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக கல்வி அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் தெரியவந்தது.

சட்டத்தை தனியானதொரு பாடமாக அல்லாது குடியியல் கல்வியில் ஒரு பகுதியாக உள்வாங்கப்பட வேண்டும் என ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. சிறுவர்களின் உரிமைகள் தொடர்பிலும் அதில் விடயங்கள் உள்ளடக்கப்படுவது முக்கியமானது என பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

தொடர் தவணைகளால்

# அரசியல் கைதிகள் பாதிப்பு

விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் வழக்குகளுக்கு நீண்டகால தவணைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதால் இரு தசாப்தக் காலங்களுக்கும் அதிகமாக சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசியல் கைதிகளுக்கான குரலற்றோர் குரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய சிறைக் கைதிகள் தினத்தை முன்னிட்டு அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுமென நீதி அமைச்சு தெரிவித்து வருகின்ற போதிலும் பெரும்பாலான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படாமல் நீண்டகால தவணைத் திகதியிடப்பட்டு வருவதையே அவதானிக்க முடிகிறது.

இதனால் இரண்டு தசாப்த காலங்களுக்கும் மேலாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வழக்குகள் காலந்தாழ்த்தப்பட்டு வருவதால் தொடர் மன அழுத்தம், வன்முறை, போதைக்கு அடிமைப்படுதல், தற்கொலை எண்ணம் போன்ற விபரீத நிலைக்கு கைதிகளை இட்டுச்செல்லும் அபாயம் ஏற்படலாம். 'கைதிகளும் மனிதர்களே' என்பதற்கினங்க அவர்களது வாழ்வுரிமையை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெலிக்கடை சிறைச்சாலைக்கும் விரைவில் 'ஜேமர் இயந்திரம்'

தொலைபேசி அலைவரிசைகளைக் கட்டுப்படுத்தும் ஜேமர் இயந்திரம், வெலிக்கடை சிறைச்சாலையிலும் விரைவில் பொருத்தப்பட உள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணவரத்ன தெரிவித்துள்ளார்.

ஜேமர் இயந்திரம் தற்போது நாட்டிலுள்ள பல சிறைச்சாலைகளிலும் பொருத்தப்பட்டுள்ளது. இதன்படி பூஸா, அங்குணுகொலபெலஸ்ஸ ஆகிய சிறைச்சாலைகளில் இந்த இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது என்றார்.

மஹர சிறைச்சாலையில் ஜேமர் இயந்திரம் பொருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக அலைபேசி நிறுவனங்களின் ஒத்துழைப்புக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு உள்ளது. ஜேமர் இயந்திரம் பொருத்தப்படும் சிறைச்சாலைகளுக்கு அருகில் உள்ள பிரதேசங்களில் வசிப்போர் எதிர்நோக்கும் சிரமங்களை தவிர்ப்பதற்காக அந்ததந்த அலைபேசி நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளாலேயே நாட்டில் பல்வேறு குற்றச் செயல்கள் நடைபெறுவதாகவும், இதனைக் கருத்திற்கொண்டே ஜேமர் இயந்திரம் பொருத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுகிறது.

சில சிறைச்சாலைகளில் ஜேமர் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளதால் நாட்டின் பல்வேறுப் பகுதிகளிலும் இடம்பெற்று வந்த கொலை, கப்பம் பெறுதல், போதைப்பொருள் வர்த்தகம் உள்ளிட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறைவடைந்து உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2019 ஆண்டிலிருந்து தற்போது வரையில் 3,200 கிலோகிராமுக்கும் அதிகளவான ஹெரோயின் போதைப்பொருளும், 3?500 இக்கும் அதிகமான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டு மக்களின் அமைதியான வாழ்க்கைக்கு தேவையான சூழலை அமைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சும் அர்ப்பணிப்புடன் செயற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.



ஜனாதிபதியின் முயற்சிகள்

# பொருளாதாரத்தை வலுப்படுத்தும்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முயற்சிகள், கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை வலுப்படுத்துமென கிராமப்புற சாலைகள் மற்றும் பிற உள்கட்டமைப்பு அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு தேவையான பொருள்களை உற்பத்தி செய்ய உள்ளூர் தொழிலதிபர்களை ஊக்குவிக்கவும் நாட்டின் பொருளாதார இலக்குகளை மேலும் மேம்படுத்தவும் ஜனாதிபதியின் முயற்சிகள் உதவுமெனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களை உள்நாட்டில் தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொ

**"ஊரடங்கு காலத்தில் வருமானம் இல்லாதவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் மக்களுக்கு கடன் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்றவர்களுக்கு ஊதியம் எந்தவித குறைப்பும் இல்லாமல் செய்யப்படும்**

ள்ளப்படுகின்றன. குறிப்பாக சுகாதாரத் துறைக்கு நன்மை பயக்கும் சில மருந்துகள் மற்றும் உப்பு பொருட்கள் மீது கவனம் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் கடந்த காலங்களில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு இடையேயான இடைவெளியை குறைக்க முடிந்துள்ளது. கோவிட் தொற்று நோயால் நாட்டின் வருமானம் குறைவாகவே உள்ளது. சுற்றுலா, பணம் அனுப்புதல் மற்றும் சுங்க வருமானம் உட்பட பல துறைகளில் நம் நாட்டிற்கான வருவாய் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெற்றவர்களுக்கு ஊதியம் எந்தவித குறைப்பும் இல்லாமல் செய்யப்படும். மேலும் ஊரடங்கு காலத்தில் வருமானம் இல்லாதவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் மக்களுக்கு கடன் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அவசரக்கால சட்டத்தால்

# அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும்

## சஜித் அணி எச்சரிக்கை



சந்தைகளை நிர்வகிப்பதற்காக அவசரக் காலச் சட்டத்தை அரசாங்கம் அமல்படுத்தியுள்ளதால் எதிர்காலத்தில் அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களுக்கு பாரியளவில் தட்டுப்பாடு ஏற்படுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அவர், உணவுப்பொருள்கள் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதால் நாட்டு மக்கள் மூன்று வேலை உணவை உட்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

கொரோனா வைரஸ் நிலைமைகளை ஆரம்பத்திலிருந்தே தற்போதைய அரசாங்கம் அரசியலாக்கியது. சுகாதார சேவைகள் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜயசிங்க, ஜயருவான் பண்டார ஆகியோரை பதவியிலிருந்து நீக்கிமையே இதற்கு சிறந்த உதாரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஊரடங்கு சட்டம், அவசரக்கால சட்டம் ஆகியவற்றை அமுல்படுத்தியும், இராணுவத்தை கொண்டு நாட்டை நிர்வகித்தும் கொரோனா வைரஸை நிலைமைகளை கட்டுப்படுத்த முடியாதென்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்தினர் தெரிந்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பைஸர் தடுப்பூசிகளை ஹம்பாந்தோட்டைக்கு அரசாங்கம் வழங்கியுள்ளது. துறைமுகம், விமான நிலைம் ஹம்பாந்தோட்டையில் இருப்பதாலேயே அங்கு பைஸர் தடுப்பூசிகள் வழங்கப்பட்டதாக அரசாங்கம் கூறுகிறது.

அரசாங்கத்தின் இவ்வாறான முட்டாள்தனமான தீர்மானங்களாலேயே விசேட வைத்திய நிபுணரான ஆனந்த விஜேவிக்ரம உள்ளிட்ட விசேட வைத்தியர்கள் கொரோனா ஒழிப்புக்கான தொழில்நுட்ப குழுவில் இருந்து விலகியதாகவும் அவர் கூறினார்.

புதிய நிதிச்சட்டம்

# கறுப்புப் பணத்தை நுழைய அனுமதிக்கும்



பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட புதிய நிதிச் சட்டம் தொடர்பில் டிரான்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா கவனம் செலுத்தியுள்ளதோடு, இச்சட்டமானது தனிநபர்களால் வெளிப்படுத்தப்படாத வருமானம், சொத்துகளுக்கு வரி விலக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும், இச்சட்டமானது பணத் தூய்மையாக்கல் நோக்கத்துக்காக தவறான முறையில் பயன்படுத்தப்படலாமென வலியுறுத்தியுள்ளது.

இச்சட்டத்தினூடாக பரந்த வரி விலக்கானது நாட்டுக்குள் கறுப்புப் பணத்தை நுழைய அனுமதிக்கும். இதனால் இலங்கை தவறான இலாபமீட்டல் செயற்பாடுகளுக்கு ஓர் புகலிடமாக மாறும்.

# ஜனாதிபதி நினைப்பு தவறானது



சுற்றுநிரூபங்கள், வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டு நாட்டை நிர்வகித்துவிடலாமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நினைப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார தெரிவித்துள்ளார்.

இதுத் தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், தனக்கு நெருங்கியவர்களை அருகில் வைத்துக்கொண்டு நாட்டை முன்நோக்கிக்கொண்டு சென்றுவிடலாமென ஜனாதிபதி நினைத்தார். இதனாலேயே தனது வார்த்தைகளே சுற்றுநிரூபங்கள் என ஜனாதிபதி மக்கள் சந்திப்பொன்றில் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடும் வேகத்தைபோல அதிகளவான வேகத்தில் அந்த வர்த்தமானி அறிவித்தல்களை ஜனாதிபதி திரும்பப் பெற்றுக்கொள்கிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

அறிவித்தல்

மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில்
(அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் கொழும்பில் நடைபெறுவது)

வழக்கு இலக்கம் : 61/20021/சீஓ
மே.நீ.-குடியியல்

இலக்கம்.248. காலிவீதி, கொழும்பு 04 என்னும் முகவரியைச் சேர்ந்த மைடீல்எல்கே (பிறைவற்) லிமிடெட் (பீவி 80907) விடயத்திலும்

1. இலக்கம்.31கே, பெயர்வெவ் ஸ்கை கார்டன்ஸ், 39, பெரேரா மாவத்தை, கொட்டுவேகொட,ராஜகிரிய என்னும் முகவரியைச் சேர்ந்த அனூப் குண்டாமால்

2. இலக்கம் 5 என் எம், அஸ்கொட் அவெனியூ, கொழும்பு 05 என்னும் முகவரியைச் சேர்ந்த வைஎன்எம்ஜேகே ஹோல்ட்டிங்ஸ் (பிரைவேற்) லிமிடெட்.

மனுதாரர்கள்

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மைடீல்எல்கே (பிறைவற்) லிமிடெட்டை (பீவி 80907) மேல் மாகாணத்தின் மேல் நீதி மன்றத்தால் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் கொழும்பில் நடைபெறுவது) ஒடுக்கப்படுவதற்கான விண்ணப்பம் 2021 ஜூலை 30ஆந் திகதி மனுதாரர்களான இல.31கே ,பெயர்வெவ் ஸ்கை கார்டன்ஸ், 39, பெரேரா மாவத்தை, கொட்டுவேகொட,ராஜகிரிய என்னும் முகவரியைச் சேர்ந்த அனூப் குண்டாமால் மற்றும் இல. 5 என் எம் , அஸ்கொட் அவெனியூ , கொழும்பு 05 என்னும் முகவரியைச் சேர்ந்த வைஎன்எம்ஜேகே ஹோல்ட்டிங்ஸ் (பிரைவேற் ) லிமிடெட். ஆகியோரால் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டது என்றும், இதில் குறித்த மனு 2021 நவம்பர் 03 ஆந் திகதி சொல்லப்பட்ட நீதிமன்றத்தின் முன் விசாரிக்கப்படுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளதெனவும் சொல்லப்பட்ட மனு சம்பந்தமாக சொல்லப்பட்ட கம்பெனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது ஆதரவு அல்லது எதிர்ப்புக் கட்டளை பிறப்பிக்க விரும்பின் விசாரணையின் போது நேரடியாகவோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அந்நோக்கத்திற்கான பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும் சொல்லப்பட்ட கம்பெனிக்கு எந்தவொரு கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்குத் தேவைப்படின் மனுவின் ஒரு பிரதி கீழ்க்கையொப்பமிட்டவர்களினால் அதற்குரிய கட்டணத்தின் படி பணக்கொடுப்பனவின் பிரகாரம் வழங்கப்படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சிவானந்தம் அண்ட் அசோசியேட்ஸ்
சட்டத்தரணிகளும் நொத்தாரிசுகளும்
இல.282/1, டாம் வீதி, கொழும்பு 12.
தொலைபேசி : - 011 2329726/011 2332470

குறிப்பு :-
மேற்குறித்த மனுவின் விசாரணையின் போது நேரில் சமூகமளிக்க எவராவது நோக்கம் கொள்வாராயின் அவரின் அல்லது அவர்களின் நோக்கம் பற்றிய அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத் தரணிகள் சிவானந்தம் அண்ட் அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு நேரில் அல்லது தபால் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். நபர்களின் பெயர்கள் விலாசங்கள் அறிவித்தலில் குறிப்பிடப்பட வேண்டும் அல்லது குழுமமாயின் குழுமத்தின் பெயர் விலாசத்துடன் நபரினால் அல்லது குழுமத்தினால் அல்லது அவரது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியால் (அவ்வாறு இருப்பின்) கையொப்பமிடப்பட்டு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப் படலாம். தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் சிவானந்தம் அண்ட் அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு 2021 நவம்பர் 02 ஆந் திகதி பி.ப. 6.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சிவானந்தம் அண்ட் அசோசியேட்ஸ்
மனுதாரர்களுக்கான சட்டத்தரணிகள்

# உள்ளாடைகளுக்கான வரிசை அடுத்த மாதம் உருவாகும்



அரிசி, பால்மா, சீனிகளை வாங்குவதற்கு மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதற்கு மேலதிகமாக தற்போது உள்ளாடைகளை வாங்குவதற்கும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், பொருளாதாரத்தை நிர்வகிப்பதிலும் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்றார்.

கடந்த வாரத்தில் மாத்திரம் 1,292 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். இதுவொரு பாரதூரமான நிலைமை. இதில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. நாளொன்றுக்கு சுமார் 200 பேர் வரையில் கொரோனா வைரஸால் உயிரிழக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

நாட்டில் நிதிப் பிரச்சினை இல்லை என அமைச்சர்கள் கூறுகிறார்கள். எனினும் நாட்டில் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பது இரகசியமல்ல. இதனால் உள்ளாடைகளை இறக்குமதி செய்வதைக்கூட அரசாங்கம் தடை விதித்துள்ளது என்றார்.

கடந்த மாதம் சமையில் எரிவாயுவுக்கு மக்கள் வரிசையில் நின்றார்கள். இந்த மாதம் அரிசி, சீனி, பால்மாவுக்காக வரிசையில் நின்றார்கள். அடுத்த மாதம் உள்ளாடைகளை வாங்குவதற்கு மக்கள் வரிசையில் நிற்க வேண்டி ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருள்களுக்கு

# பொத்துவிலில் பஞ்சமில்லை

■ எம்.எஸ்.எம். ஹனீபா

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமலிலுள்ள காலப்பகுதியில், பொத்துவில் பிரதேசத்தில் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருள்களை நடமாடும் சேவை ஊடாக நாளாந்தம் கிரமமான முறையில் விநியோகிக்கப்பட்டு வருவதாக, பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எச். அப்துல் றஹீம், நேற்று (12) தெரிவித்தார்.

பொத்துவில் பிராந்தியத்தில், கொரோனா தாக்கம் அதிகரித்து காணப்படுகின்ற நிலையில், பொதுமக்கள் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை முழுமையாகக் கடைப்பிடிக்குமாறும், அவர் கேட்டுக்கொண்டார்.



இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறி சில வர்த்தக நிலையங்கள் திறந்து இருப்பதாகவும் மக்கள் வீதிகளில் நடமாடுவதையும் காணக்கூடியதாக உள்ளதென்றார்.

இவர்களை கைது செய்வதற்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் சுகாதாரத் துறையினரும் கூட்டாக இணைந்து விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

ஊரடங்கு சட்டத்தை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு, சில வர்த்தக நிறுவனங்களில் அரசாங்க கட்டுபாட்டு விலையை விட அதிக விலைக்கு அத்தியாவசிய பொருள்களை விற்பனை செய்வது, பொறிக்கப்பட்ட விலையை மாற்றம் செய்வது, பொருள்கள் விற்பனை செய்யும் போது நிபந்தனை விதிப்பது, பொருள்களை விற்பனை செய்ய மறுப்பது, காலவதியான பொருள்களை விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்கு காட்சிப்படுத்தல், உணவுப் பொருள்களில் கலப்படம் மேற்கொள்தல் என்பன தண்டைக்குரிய குற்றங்களாகும்,

இவ்வாறான வர்த்தக நிலையங்கள் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், உரிய உரிமையாளருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், அவர் தெரிவித்தார்.

சிறிதரனின் கருத்து தொடர்பில்

# ஆராயப்படும்

## புலிகளை விசாரிக்க வேண்டும் என்று கோரவில்லை என்கிறார் மாவை

■ மு.தமிழ்ச்செல்வன்

பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரனின் கருத்து தொடர்பில், அரசியல் குழுவில் ஆராயப்படுமென, தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அத்துடன், தாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் விடுதலைப் புலிகளை விசாரிக்க வேண்டும் என்று கோரவில்லை எனவும், அவர் கூறினார்.

“தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனால் அனுப்பட்ட கடிதம், எனது மின்னஞ்சலுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் அனுப்பட்டிருந்தது. அதில், தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க் குற்றங்களும் விசாரிக்கப்பட வேண்டும் என்றிருந்தமையால், நாம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை” என, கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், பாராளுமன்ற உறுப்பினர்



சி.சிறிதரன் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், “ஐ.நாவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் விசாரிக்க வேண்டும் என்று கோரப்படவில்லை” எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இது தொடர்பில், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவை, நேற்று முன்தினம் (11) தொடர்பு கொண்டு, ‘உங்கள் கட்சிக்குள் இருக்கும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள், சம காலத்தில் இருவேறு கருத்துகளை தெரிவித்துள்ளனர். இதில் யாருடைய கருத்து உண்மையானது?’ என வினவிய போதே, மாவை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரனின் கருத்து தொடர்பில், தான் அறிந்திருக்கவில்லை என்றார்.

இது தொடர்பில் தான் ஆராய்ந்துவிட்டே கூறுவேன் எனத் தெரிவித்த அவர், ஆனால் தாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் விடுதலைப் புலிகளை விசாரிக்க வேண்டும் என்று கோரவில்லை எனவும் இதுதான் உண்மை எனவும் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், அவ்வாறு கூறியிருந்தால், அது தொடர்பில் கட்சியின் அரசியல் குழுவில் ஆராயப்படும் எனவும், மாவை தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின்

# பணிப்புரைக்கு அமைவாக செயற்படவும்

■ இ.சுதாகரன்



சுகாதார அமைச்சின் பணிப்புரைக்கு அமைவாக முன்னெடுக்கப்படுகின்ற சுகாதார திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைவாக செயற்பட வேண்டிய பொறுப்பு மக்களைச் சார்ந்ததாகும் என, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்ப் பிரதேச செயலகங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான ப.சந்திரகுமார் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு அலுவலகத்தில், நேற்று (12) நடைபெற்ற கொவிட் - 19 தொற்று தொடர்பான கலந்துரையாடலின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் சிறப்பான முறையில், சுகாதார முறையில் பாதுகாக்கப்படுவது மாத்திரமல்லாது, தனிமைப்படுத்தலுக்கு உட்படுகின்ற குடும்பங்களுக்கு பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதிகளையும் அரசாங்கம் துரிதமாக வழங்கி வருகின்றன என்றார்.

# ஆயுர்வேத மருந்து பொதி வழங்கல்



■ நூருல் ஹுதா உமர்

நிந்தவூர் அரச ஆயுர்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் வைத்தியசாலையால், கொரோனா தொற்று காரணமாக வீடுகளில் சுயதனிமைப் படுத்தப்பட்டவர்களின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பாரம்பரிய ஆயுள்வேத முறைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்து பொதி வழங்கல் அறிமுக நிகழ்வும் சுவதாரணி ஆயுர்வேத மருந்து வழங்கும் நிகழ்வும், புனித தீகவாபி பரிவாரசைத்தியில், முதல் முறையாக நடைபெற்றது.

கொரோனா தொற்று காரணமாக, வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்களின் நலன் கருதி, அவர்களின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் நோக்குடனேயே, முதல் தடவையாக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




பலநோக்குக் கூட்டுறவு சங்கம்

# கிளைக்கு எதிராக வழக்கு

■ எஸ். நிதர்ஷன்

அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டின் கீழ், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவு சங்க கிளைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவு சங்க கிளை ஒன்றில், ஒரு கிலோ கிராம் சீனி 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

அதன் பிரகாரம், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து, குறித்த பலநோக்குக் கூட்டுறவு சங்க கிளைக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளனர்.

பரந்தன், கண்டாவளை பகுதிகளில்

# கமநல சேவை நிலையங்கள் அமைக்க நடவடிக்கை



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன், கண்டாவளை ஆகிய பகுதிகளில் இரண்டு கமநல சேவை நிலையங்களை அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன

இதற்கமைய, குமரபுரம், பரந்தன், உமையாள்புரம், ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, கோரக்கன்கட்டு ஆகிய 6 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில், 1,883 விவசாய குடும்பங்களுக்கு சேவை வழங்கும் வகையில், பரந்தன் கமநல சேவை நிலையம் அமைக்கப்படவுள்ளது.

அத்துடன், ஊரியான், முரசுமோட்டை, கண்டாவளை ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில், 1,443 விவசாய குடும்பங்களுக்கு சேவை வழங்கும் வகையில், கண்டாவளை கமநல சேவை நிலையத்தையும் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடலோரப் பகுதியில்

# குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

■ தீஷான் அஹமட்

திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனையூர் பகுதியில் உள்ள களப்புக் கடலோரப் பகுதியில் இருந்து, நேற்று முன்தினம் (11), சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், மூதூர் - சேனையூர் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கனகரத்தினம் கதிர்காமத்தம்பி (வயது 46) என்பவர் ஆவார்.

வெள்ளிக்கிழமை (10) மாலை வீட்டில் இருந்து சென்ற குறித்த நபர், காணாமல் போயிருந்த நிலையில், நேற்று முன்தினம் (11) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை, சம்பூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



சேதன பசளை ஊடாக

# நெல் உற்பத்தி திறனை அதிகரிக்க உழைக்கவும்

■ செ.கீதாஞ்சன்

வடமாகாணத்தில், இந்தமுறை காலபோகத்துக்கான இரசாயன உரப் பாவனை நிறுத்தப்பட்டுள்ள நிலையில், சேதன பசளையைப் பயன்படுத்தி, வடமாகாணத்தின் நெல் உற்பத்தி மட்டத்தை அடைய விவசாயிகள் அனைவரும் உழைக்க வேண்டும் என்று, வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்தில், நேற்று முன்தினம் (11) நடைபெற்ற சேதன பசளை உற்பத்தி தொடர்பான விவசாயிகளுக்கான விழிப்புணர்வு நடவடிக்கையின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், காலபோகத்துக்கான காலம் நெருங்கி வரும் நிலையில், வடமாகாணத்தில் 1 இலட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்காக, 2 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலம் நேர காலத்துடன் விவசாயிகள் தயார்படுத்துவது அத்தியாவசியமானது எனவும், அவர் கூறினார்.

வீட்டு வேலைக்காக வாங்கி வைத்த

# சீமேந்து மூடைகள் திருட்டு



■ க.விஜயரெத்தினம்

துறைநீலாவணையில், வீட்டு வேலைக்காக வாங்கி வைத்திருந்த சீமேந்து மூடைகள் மூன்று, நேற்று (12) அதிகாலை 1.30 மணியளவில் திருடப்பட்டுள்ளன.

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துறைநீலாவணை 7ஆம் வட்டாரத்தில் உள்ள வீடொன்றிலேயே, இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனது மகள் ஒருவர் மத்திய கிழக்கு நாடொன்றில் கடமைபுரியும் மாதச் சம்பளத்தில் 1,300 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்பட்ட சீமேந்து மூடைகளே, இவ்வாறு திருடர்களால் திருடப்பட்டுள்ளன.

# உலமாக்கள், இமாம்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், நாட்டிலுள்ள அனைத்து உலமாக்கள் மற்றும் இமாம்களுக்கான பயிற்சி கருத்தரங்கொன்றை நடத்த தீர்மானித்துள்ளதாக, முஸ்லிம் சமய திண்பாட்டலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

‘வக்பு சட்டங்கள் மற்றும் சமகால விடயங்கள்’ எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கு, நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கியதாக காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக, இன்று (13) தொடக்கம் எதிர்வரும் 25ஆம் திகதி வரை, நடத்தப்படவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில், இன்று (13) பிற்பகல் 04.30-06.30 வரையும், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள் புதன்கிழமை (15) பிற்பகல் 04.30-06.30 வரையும், வடமேல் மாகாணத்தில் சனிக்கிழமை (18) பிற்பகல் 04.30-06.30 வரையும், வடமத்திய மாகாணத்தில் திங்கட்கிழமை (20) பிற்பகல் 04.30-06.30 வரையும், ஊவா, தென் மற்றும் வட மாகாணங்களில் புதன்கிழமை (22) பிற்பகல் 04.30-06.30 வரையும், மேல் மாகாணத்தில் சனிக்கிழமை (25) பிற்பகல் 04.30-06.30 வரையும் இந்தப் பயிற்சி கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

# 100 வயதான மூதாட்டிக்கு கொரோனா தடுப்பூசி



■ க. அகரன்

வவுனியா - நெடுங்கேணி பகுதியில், 100 வயது நிரம்பிய வயோதிப பெண் ஒருவருக்கு, நேற்று முன்தினம் (11), நடமாடும் மருத்துவ சேவையினரால் முதலாவது கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

சிலர் அச்சம் காரணமாக தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முன்வர தயக்கம் காட்டி வருகின்ற நிலையில், குறித்த வயோதிப பெண், தடுப்பூசி போட முன்வந்தமை பாராட்டத்தக்க விடயமாகும்.

நெடுங்கேணி - மருதோடை கிராமத்தைச் சேர்ந்த குறித்த மூதாட்டி, கொரோனா தடுப்பூசி போட விரும்புவதாக கூறியதற்கு இணங்க, வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரின் நடமாடும் தடுப்பூசி சேவையின் ஊடாக, முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டார்.

நீர்ப்பட்டியல்

# கட்டணங்களை செலுத்தவும்

■ க. அகரன்



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்திய வாடிக்கையாளர்கள் அனைவரும், தங்களது மாதாந்த நீர்ப்பட்டியல் கொடுப்பனவுகள், நிலுவைகளை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தற்போதைய கொரோனா காலத்தில் வரிசையில் நின்று உங்களது ஆரோக்கியத்துக்கு பாதுகாப்புக்கு தீங்கேற்படாதவாறு, வீட்டில் இருந்தவாறு, தேசிய நீ வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஸ்மார்ட் (Smart Zone - waterboard.lk) என்ற இணையத்தள முகவரி ஊடாக மாதாந்த நீர்ப்பட்டியல் கட்டணங்களை செலுத்தலாம்.

# சீனிக் கள்ளு தயாரித்தவர் கைது

ஆ.ரமேஸ்

சட்ட விரோதமாக சீனிக் கள்ளு தயாரித்து, விற்பனை செய்த நபர் ஒருவரை, கந்தப்பளை பொலிஸார் நேற்று (12) பகல் கைது செய்துள்ளனர்.

கந்தப்பளை- நோனா தோட்டத்தைச் சேர்ந்த குறித்த சந்தேகநபரின் வீட்டிலிருந்து, 80 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா கலந்த பாணி திரவமும், மற்றும் உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளதாக கந்தப்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

# ஹட்டன் சதொச மூடப்பட்டது

எம்.கிருஸ்ணா

ஹட்டன், மல்லியப்பு பகுதியில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்தில் வேலை செய்யும் ஊழியர் ஒருவருக்கு, கொரோனா தொற்று உறுதியானதையடுத்து குறித்த சதொச விற்பனை நிலையம் 14 நாள்களுக்கு மூடப்பட்டுள்ளது.

அத்துடன், இங்கு பணிபுரிந்த 9 ஊழியர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக ஹட்டன் நகரின் பிரதான சந்தைப்பகுதியிலுள்ள மற்றுமொரு சதொச நிலையத்தில், பால்மாவைப் பெற்றுக்கொள்ள, நுகர்வோர் நீண்ட வரிசையில் நின்ற நிலையில், அனைவருக்கும் முறையாக பால் மா பக்கட்டுக்கள் விநியோகிக்கப்பட்டன.

# "பாற்பண்ணைத் திட்டத்தை நான் வரவேற்கின்றேன்"

## சதாசிவம் தெரிவிப்பு

டி.ஷங்கீதன்



அரசாங்கத்தின் பாற்பண்ணைத் திட்டத்தை தான் வரவேற்பதாகவும் அதனை பெருந்தோட்ட மக்களுக்கு சார்பானதாக அமையும் வகையிலான திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவருமான சுப்பையா சதாசிவம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு நேற்று (12) கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கம் கொண்டுவருகின்ற திட்டங்களை எதிர்ப்பதனால் எந்த நன்மையும் நமக்கு கிடைக்காது. கொண்டுவருகின்ற திட்டங்களில் நாம் எவ்வாறு பயன்பெறமுடியும், எமது மக்களுக்கு அதில் பெறக்கூடிய நன்மைகள் என்ன என்பது தொடர்பாக சிந்தித்து அதற்கேற்றவகையில் அரசாங்கத்திடம் பேச்சுவார்த்தை நடாத்தி அந்த திட்டத்தில் எங்களுடைய மக்களை உள்வாங்குவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்றார்.

# உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன



இரா.யோகேசன்

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள, வட்டவளை பிரதேச மக்களுக்கான உலர் உணவுப் பொருள்கள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இளைஞர் ஒருங்கமைப்பாளரும் தர்னா தியட்டர் கழகத்தின் தலைவருமான அமில பிரசாத் கமகேவால் வழங்கி வைக்கப்பட்டன.

குறிப்பாக தியகல, மவுண்ட்ஜின் தோட்டம் ஆகிய இடங்கிளிலுள்ள மக்களுக்கு இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன்,குறித்த பிரதேசங்களிலுள்ள கர்ப்பிணிகள், முதியோர்களுக்குத் தேவையான பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன.

பெருந்தோட்ட மக்களை பின்னோக்கி கொண்டு செல்வதற்கான

# நகர்வுகள் ஆரம்பம்

## வேலுகுமார் எம்.பி தெரிவிப்பு



மலையகத் தமிழர்களின் வாழ்வியல், பொருளாதாரம், அரசியல் மற்றும் இதர உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும், இருப்பவற்றை தக்கவைத்துக்கொள்வதற்காகவும் அனைத்து வழிகளிலும் நாம் போராடுவோம் என தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார், இதற்கு சர்வதேச தலையீடு அவசியமெனில் ஐ.நா. உள்ளிட்ட அதன் கிளை அமைப்புகளை நாடுவதற்கும் தயாராகவே இருக்கின்றோம் என்றார்.

நேற்று(12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "இந்நாட்டில் வாழும் மலையகத் தமிழர்கள் அன்று முதல் இன்றுவரை திட்டமிட்ட அடிப்படையில் வஞ்சிக்கப்படுகின்றனர். சாதாரண மனிதரொருவருக்கு கட்டாயம் கிடைக்கவேண்டிய - அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள்கூட எமது மக்களுக்கு காலம் கடந்தே கிடைத்தன.

ஆனால் முழுமையாக கிடைக்கவில்லை. இந்நிலைமையை மாற்றியமைத்து நல்லாட்சியின்போது குறுகிய நான்கரை வருட காலப்பகுதியில் முக்கியமான சில விடயங்களை நாம் நிறைவேற்றினோம். சமூக மறுமலர்ச்சிக்கான அடித்தளத்தையும் சிறப்பாக இட்டிருந்தோம். குறிப்பாக பெருந்தோட்டப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, அவர்களை முன்னோக்கி அழைத்துச்செல்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன.

ஆனால் பெருந்தோட்ட மக்களை பின்நோக்கி கொண்டுசெல்வதற்கான நகர்வுகள் தற்போதைய ஆட்சியின்கீழ் முன்னெடுக்கப்படுகின்றன. எமது மக்களுக்கு கிடைக்க வேண்டிய காணி உரிமையை வெளியாருக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. சிறுதோட்ட உரிமையாளர் என்ற எண்ணமும் குழிதோண்டி புதைப்பதற்கான நகர்வு இடம்பெறுகின்றது. எமது மக்களை தொடர்ந்தும் நாட் கூலிகளாக வைத்திருக்கவும், உரிமைகளை மறுப்பதற்கான வியூகமும் அரங்கேற்றப்பட்டுவருகின்றது" என்றார்.

தோட்ட மக்களின் சிரமதானத்தை

# தடுத்து நிறுத்திய தோட்ட நிர்வாகம்

எஸ்.சதீஸ்



மடுல்சீமை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் பொகவந்தலாவ- கெர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவு தோட்டத்தில் சிரமதான பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களை, தோட்ட நிர்வாகம் தடுத்து நிறுத்தியதாக தொழிலாளர்கள் குற்றஞ் சுமத்துகின்றனர்.

காசல்றீ நீர்தேக்கத்துக்கு நீர் ஏந்திச் செல்லும் கெர்க்கஸ்வோல்ட் கிளை ஆறு நீண்டகாலமாக , மழை காலங்களில் லெச்சுமி தோட்ட மத்திய பிரிவு மக்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்தனர்.

இந்த நிலையில், தோட்ட நிர்வாகம் இந்த நடவடிக்கையை ஆரம்பித்து, இடையில் கைவிட்டது.

இதனால் ஆற்றை அகலப்படுத்தும் நடவடிக்கையை தோட்ட மக்கள் நேற்று (11) முன்னெடுத்த போது, தோட்ட நிர்வாகம் அதனை தடுத்து நிறுத்தியது.

எனினும் அம்பகமுவ பிரதேச செயலகத்தில் எவ்வித அனுமதியினையும் பெறாமலேயே தோட்ட நிர்வாகம் இந்த பணியை ஆரம்பித்து இடையில் இடைநிறுத்தியது.

இது தொடர்பில், கெர்க்கஸ்வோல்ட் தோட்ட முகாமையாளர் நிலான் லியனகேவிடம் வினவிய போது, தோட்டநிர்வாகத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டத்திற்காகவே, குறித்த ஆற்றை அகலபடுத்தும் நடவடிக்கையை தாம் முன்னெடுத்ததாக அவர் தெரிவித்தார்.



மலையக சமூக நலநோக்கு அமைப்பு USWO

# அங்குரார்ப்பணம்



மஸ்கெலியா –ப்ரௌன்லோ தோட்ட இளைஞர்களால், 'மலையக சமூக நலநோக்கு' என்ற புதிய அமைப்பொன்று நேற்று முன்தினம் (10) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. பொருளாதார ரீதியாக பின்னடைவை சந்திக்கும் மாணவர்களின் கல்வி செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லவும், சுகாதார உதவிகளை வழங்குவதற்காகவும்,விளையாட்டு மற்றும் சில சமூக அபிவிருத்திகளை மேற்கொள்வதனை நோக்காக கொண்டு இந்த மலையக சமூக நலநோக்கு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. (பி. கேதீஸ்)

மத்திய மாகாணத்தில்

# 60 ஆயிரத்தை அண்மித்தது

மொஹமட் ஆஸிக்

மத்திய மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அறுபதாயிரத்தை நெருங்குவதாக மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நேற்று (12) வரை 59,408 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் கடந்த 24 மணிநேரத்தில் கண்டி மாவட்டத்தில் 106 தொற்றாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 104 தொற்றாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 34 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளனர்.

அத்துடன், கண்டி மாவட்டத்தில் இதுவரை 29,719 தொற்றாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 12,665 தொற்றாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 17,024 தொற்றாளர்களும் என 59,408 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மத்திய மாகாணத்தில் இதுவரை 1,740 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளதாகவும் இதில் கண்டி மாவட்டத்தில் 884 பேரும் மாத்தளை மாவட்டத்தில் 427 பேரும் நுவரெலியா மாவட்டத்தில் 429 பேரும் உயிரிழந்துள்ளனர்.

# "காணாமல்போன தந்தையை மீட்டுத்தாருங்கள்"

## பொலிஸ் சார்ஜனின் மகன் வேண்டுகோள்

எம். கிருஸ்ணா



கொத்மலை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சார்ஜனாக கடமையாற்றி வந்த, சுப்பையா இளங்கோவன் சுகவீனம் காரணமாக கடந்த 08 ஆம் திகதி கம்பளை மாவட்ட வைத்தியசாலையில் உறவினர்களினால் அனுமதிக்கப்பட்ட நிலையில், அன்றைய தினமே வைத்தியசாலையிலிருந்து காணாமல் போயுள்ளர்.

இதனையடுத்து, கம்பளை பொலிஸ் நிலையத்தில் உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதும் இதுவரையில் அவரை கண்டுபிக்கப்படவில்லை.

எனவே, நான்கு நாள்களாக தேடப்பட்டு வரும் தனது தந்தையை மீட்டுத்தாருங்கள் என, மூத்த மகனான இளங்கோவன் அபிநாத் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

33 வருடங்களாக பொலிஸ் சேவையில் கடமையாற்றும் இவர், மலையக அரசியல்வாதிகளின் பாதுகாவலராகவும் கடமையாற்றியவராவார்.

சம்பவம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட உயர் மட்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கையில், இளங்கோவன் நோயுற்ற நிலையில் பயம் காரணமாக, நண்பர்கள் அல்லது உறவினர்கள் வீடுகளுக்கு சென்றிருக்கலாம் என்றும் கம்பளை மற்றும் கொத்மலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.




பொகவந்தலாவையில்

# விரைவில் சதொச

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் நடவடிக்கை

துவாரஷான்

பொகவந்தலாவ நகரில் பொது மக்கள் குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்ளும் வகையில், சதொச விற்பனை நிலையத்தை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக நோர்வூட் பிரதேச சபைத் தலைவர் கே. குழந்தைவேல் ரவி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

35 தோட்டங்களைச் சேர்ந்தவர்களும் பொகவந்தலாவை நகருக்கு தமது அத்தியாவசிய தேவைக்காக வரும் நிலையில், குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்து கொள்ளக் கூடிய "சதொச" விற்பனை நிலையம் இல்லாமல் உள்ளது பெரும் குறையாகக் காணப்படுகின்றது.

இதற்காக நேரத்தையும் பணத்தையும் செலவிட்டு ஹட்டன் நகருக்குச் சென்றாலும் கூட, உரிய நேரத்தில் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது.

எனவே, பொகவந்தலாவ நகரில் சதொச நிலையத்தை அமைக்க வேண்டியதன் அவசியத்தை, தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து, அவர் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் தொடர்பு கொண்டு அதற்கான ஒப்புதலை பெற்றுக் கொடுத்துள்ளார்.

வர்த்தக அமைச்சரின் வேண்டுகோளுக்கு அமைய, சதொச விற்பனை நிலையத்தை அமைப்பதற்கான காணியைப் பெற்றுக் கொள்ள பொகவந்தலாவ பிளாண்டேஷன் கம்பனிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்து, காணியைப் பெற்றுக் கொள்வதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

# ஏமாற்றிவிட்டவர்கள் ‘மனித வெடிகுண்டாக’ சமூகத்தில் உலாவலாம்

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ள நிலையில், பெரும் நகரங்களில் ‘அத்தியாவசிய சேவைகள்’ எனும் பெயரில், கடைகளில் ஓரிண்டு பலகைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. சில கடைகளில், முழகாலுக்கு கீழே கதவுகள் திறந்துள்ளன. இன்னும் சில கடைகளில் இரண்டொரு நுகர்வோரை மட்டுமே கடைக்குள் அனுமதித்து வியாபாரம் செய்யப்படுகின்றது.

இக்காலப்பகுதியில், நுகர்வோரின் பாடு பெரும் திண்டாட்டமாகவே உள்ளது. கடைக்குச் சென்றுதிரும்பியவர்கள் மூடை, மூடையாக எதனையும் வீடுகளுக்கு கட்டிக்கொண்டு வரவில்லை. கைகளில் தூக்கிக்கொண்டு வரக்கூடிய அளவுக்கு பொருள்களைக் கொள்வனவுச் செய்துகொண்டு, நடந்தே வீடுகளுக்குத் திரும்பிவிடுகின்றனர்.

பொருள்களின் விலைகள் நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு தலைக்குமேல் ஏறிநிற்கிறது. வருமானம், மேலதிக வருவாய் எதுவுமே இல்லாதவர்கள், ஒவ்வொரு நாளையும் பெரும் திண்டாட்டத்துக்கு மத்தியிலே கழித்துக்கொண்டிருக்கின்றனர்.

கதவுகளுக்கு வெளியேநின்று, பொருள்களை கொள்வனவு செய்தவர்கள் வீட்டுக்கு வந்தததன் பின்னர்தான், எவ்வளவுக்கு எவ்வளவு தராசு விழுங்கியிருக்கிறது என்பது தெரிகிறது.

சில பொருள்களை ஏன்தான் கொள்வனவு செய்தோமென நினைக்கும் அளவுக்கு இருக்கும். கடைக் கதவுக்கு உள்ளே முதலாளியையும் வெளியே நுகர்வோரையும் சமூக இடைவெளியில் நிறுத்தியிருக்கும் கொரோனா, பொருள்களின் நிறையை விழுங்கி, நுகர்வோரின் வயிற்றில். அடிக்குமேல் அடித்துவிடுகிறது.

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் இலங்கைக்கு மட்டுமல்ல, உலகநாடுகளுக்கே முதல் அனுபவமாகும். முழு ஊரடங்கு, தனிமைப்படுத்தல் சட்டம், தளர்த்தப்பட்ட சட்டம் என அமல்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள், நான்காவதாக தனிமைப்படுத்தல் ஊரடங்காக பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால், நான்காவது நிலையிலும் முழுமையான திட்டமொன்று வகுக்கப்படவில்லை என்பதே யதார்த்தமாகும்.

ஒருவரை மற்றொருவர் எவ்வாறு ஏமாற்றலாமென நினைத்துகொண்டுதான் இருக்கின்றனர். கொரோனா வைரஸ் தொற்றிக்கொள்ளாது இருப்பதற்காக ஆகக் குறைந்தது, தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளவேண்டும்.

ஆனால், தாங்கள் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டுவிட்டோம் என தடுப்பூசி அட்டைகளில் பதிந்துகொண்ட சிலர், தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளாமலே சென்றிருக்கின்றமை காலியில் கண்டறியப்பட்டது.

இவ்வாறானவர்கள், முதலாவது தடுப்பூசியியின் போதும் இவ்வாறுதான் ஏமாற்றினார்களா? இன்னும் எத்தனை பேர் ஏமாற்று ஆயுதத்தை கையிலெடுத்தனர் என்பதெல்லாம் கண்டறியப்படவேண்டும். ஏதாவதொரு தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாது, சமூகத்தில் நடமாடும் கொரோனா, மனித வெடிகுண்டுகளாக மாறலாம்.

12 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால், 18 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்களில் பலர் இன்னுமே ஒரு தடுப்பூசியைக்கூட ஏற்றிக்கொள்ளவில்லை. இதுவும் ஆபத்தானது.

ஏமாற்றிவிட்டோம் என நினைத்து, முழு நாட்டையும் முடக்கத்தில் வைத்திருக்க முயல வேண்டாம் என்பதே எமது வேண்டுகோளாகும்.

---

## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

தற்காலத்தில் அநேகமானவர்கள், ஆனந்தமாகப் பொழுதுபோக்குகளை அனுபவிப்பதற்காக, புனிதமான கலாசாரத்துக்கு ஊறு விளைவிக்கும் செயல்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

திரைப்படங்களின் ஊடாகப் ஆபாசங்களையும் ஒழுக்கப் புரள்வுகளையும் பார்த்து இரசிக்கின்றார்கள். பாரம்பரியங்களைத் தெரியாமலே, இளைய தலைமுறையினர் உளர். உணவுப் பழக்கங்களில் கூட, படிப்படியாக ஆடம்பர உணவுப் பழக்கங்களுக்கே முதலிடம் கொடுக்க ஆரம்பித்து விட்டனர்.

உடலுக்கும் உள்ளத்துக்கும் கேடு விளைவிக்கும் சகலதுமே, நாகரிகத்தின் பெரும் தேடல் எனக் கருதி வாழ்வது, தங்களைத் தாங்களே சிதைப்பது போலாகும். எதைச் செய்தாலும், அது என்ன என ஆராய்வதும் இல்லை. தினை, சாமி, வரகு, கொள்ளு போன்ற தானியங்களை இளம் தலைமுறையினருக்குத் தெரியாது. பழமையைத் தெரியாமல் புதுமை இல்லை.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

---

## தமிழ் அரசியலில்
# திட்டமிடல், தூரநோக்குக்கான தேவை



என்.கே. அஷோக்பரன்

உலகத்தையே, ஏறத்தாழ ஒன்றரை வருட காலத்துக்கு மேலாக, ‘கொவிட்-19’ பெருந்தொற்று ஆட்டம் காணச் செய்துகொண்டிருக்கிறது.

‘கொவிட்-19’ இன் கோரமுகத்தை, இலங்கை எதிர்நோக்கியிருக்கும் இந்த நிலையில், இலங்கை வாழ் மக்கள், ஆரோக்கிய ரீதியான சவாலை மட்டுமல்ல, வாழ்வாதார ரீதியான சவாலையும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ‘கொவிட்-19’ வெறும் பெருந்தொற்று நோய் மட்டுமல்ல; அதன் விளைவுகள், இந்நாட்டின் உற்பத்தியையும் பொருளாதாரத்தையும் தள்ளாட்டம் காணச்செய்துள்ளது.

பொருளாதார வீழ்ச்சியின் விளிம்பில், இலங்கை நின்று கொண்டிருக்கிறது. உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஒருபுறமிருக்க, தொடர் முடக்கங்களால், பிரயாணத் தடைகளால் பல குடிமக்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

பல குடும்பங்களின் தப்பிப்பிழைத்தலைக் கூட, பெருஞ்சவாலுக்குள் தள்ளியிருக்கிறது. மறுபுறத்தில், பணவீக்கமும் விலைவாசி அதிகரிப்பும், மக்களின் கழுத்தை நெரித்துக்கொண்டிருக்கின்றன.

‘கொவிட்-19’ பெருந்தொற்று, ஏதோ ஒரு வகையில் முடிவுக்கு வந்தாலும், அதனால் ஏற்பட்ட பொருளாதார காயங்கள் குணப்படுவதற்கு, பல ஆண்டுகள் தேவைப்படலாம்.

இந்தச் சூழ்நிலையில்தான், இலங்கை வாழ் தமிழ் மக்களின் நிலைமை பற்றி சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது. தரவுகளின்படி, பொருளாதார ரீதியில் ஆகப் பின்தங்கிய மாவட்டங்களாக வடக்கும் கிழக்கும் இருக்கின்றன.

யுத்தம் பிரதான காரணம் என்றாலும், யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, ஒரு தசாப்தம் கடந்தும், பெருமளவுக்கு உற்பத்தித் துறை வடக்கு-கிழக்கில், குறிப்பாக வடக்கில் அபிவிருத்தி செய்யப்படவில்லை.

உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் செய்யப்பட்டாலும், அதன் பலாபலனைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையிலான உற்பத்தித் துறையொன்றின் வளர்ச்சி அங்கு ஏற்படுத்தப்படவில்லை.

இதற்கு 2009இன் பின்னர் ஆட்சி செய்த எல்லா அரசாங்கங்களும் பொறுப்பேற்க வேண்டும் என்பது ஒருபுறமிருக்க, அந்த மக்களின் பிரதிநிதிகளாகத் தம்மை முன்னிறுத்திக்கொள்வோரும், அதற்காக அம்மக்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுத்தவர்களும் கூட பொறுப்பாளிகளே!

நீங்கள் ஆளுங்கட்சியில் இருந்தாலும் எதிர்க்கட்சியில் இருந்தாலும், உங்களுடைய பிரதான கடமை உங்களைத் தேர்ந்தெடுத்த, நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் நலன். அந்த நலனைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளையும் செயற்றிட்டங்களையும் முன்னெடுக்க வேண்டியது அத்தியாவசியத் தேவை.

இந்த இடத்தில், தமிழ் அரசியல்வாதிகள் புரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான விடயம், தமிழ் மக்கள் இருக்கின்ற வரை தான் உங்கள் அரசியல்.

ஆகவே, அந்த மக்களைப் பாதுகாப்பதும், அவர்களது நலனோம்பலும், உங்கள் அரசியல் மூலதனத்தைப் பாதுகாப்பதற்கான அடிப்படை.

அதனிலிருந்து நீங்கள் விலகினால், அது ஒட்டுமொத்த தமிழ் மக்களை மட்டுமல்ல, உங்களுடைய அரசியலையும் சூனியத்துக்குள் தள்ளுவதாக அமையும். நிற்க!

வடக்கு-கிழக்கு தமிழ் அரசியலில் ஒரு பாணி தொற்றிக்கொண்டுவிட்டது. தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள், பகட்டாரவாரப் பேச்சின் ஊடாக, ‘உணர்ச்சி அரசியலை’ மட்டும் முன்னெடுப்பதும், பெருந்தேசியக் கட்சி சார்ந்தவர்கள் ஆதரவுத்தள அரசியலை, ‘அபிவிருத்தி அரசியல்’ என்ற பெயரில் முன்னெடுப்பதுமே இங்கு காலகாலமாக நடந்து வருகிறது.

தமிழ்த் தேசியம் பேசுவோரிடம் தமிழ்த் தேசத்தை கட்டமைப்பது, தேசக்கட்டுமானம் பற்றிய எந்தத் திட்டமோ, உபாயமோ இல்லை. ‘மூச்சுக்கு முந்நூறு முறை’ “தமிழ்த் தேசம்... தமிழ்த் தேசம்” என்று உச்சரிப்பது மட்டுமே, அவர்களது அரசியல்.

‘மந்திரத்தாலே எங்கும் மாங்கனி வீழ்வதுண்டோ’ என்று பாரதி கேட்டது போல, “தமிழ்த் தேசம்.... தமிழ்த் தேசம்” என்று சொல்வதால் மட்டும், தமிழ்த் தேசம் கட்டமைந்து விடாது. முதலில் அதற்கான ஒரு தூரநோக்குத் திட்டம் அவசியம்.

அதற்கு தமிழ்த் தேசிய அரசியல், சில அடிப்படைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

முதலாவது, இலங்கைத் தீவில் பிரிவினை என்பது சாத்தியமில்லை. எத்தகைய தீர்வாயினும் அது ஓர் அரசுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்.

இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு, இலங்கை என்ற ஓர் அரசுக்குள் பன்மைத் தேசங்களைக் கட்டியெழுப்புவது பற்றி சிந்திப்பதுதான், தமிழ்த் தேசிய அரசியல் தமிழ் மக்களுக்கும் தமிழ்த் தேசத்துக்கும், ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் செய்கின்ற பெரும் நன்மையாக அமையும்.

வெற்றுப் பகட்டாரவாரங்களை விட்டுவிட்டு, திடமான தொலைநோக்குத் திட்டமொன்றை வகுக்கவும் அதனை அடையப்பெறுவதற்கான முறையான செயற்றிட்டங்களைத் திட்டமிட வேண்டும்.

அவற்றை, ஐந்தாண்டு, பத்தாண்டு, பதினைந்தாண்டு, இருபதாண்டு, இருபத்தைந்தாண்டு திட்டங்களாக, பொருத்தமான அடைவுகளை இலக்குகளாக அடையாளப்படுத்தி செயற்படுத்துவதன் மூலம், விளைபயன் தரக்கூடிய அரசியலை தமிழ்த் தேசிய பரப்பில், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் முன்னெடுக்கலாம்.

இத்தனை வருட தமிழ்த் தேசிய அரசியலில், இன்று வரை தமிழ்த் தேசமொன்றைக் கட்டமைப்பதற்கான முறையான திட்டமோ, செயற்றிட்டமோ ஒரு தமிழ் அரசியல் கட்சியிடம் கூட இல்லை என்பதுதான் கசப்பான உண்மை.

1976இல், வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றி, “தனிநாடே தீர்வு” என்று சொன்னபோது கூட, செல்வநாயகத்திடமோ அமிர்தலிங்கத்திடமோ, எந்தவொரு தமிழ்க் கட்சியிடமோ, அதற்கான திட்டமோ, செயற்றிட்டமோ காணப்படவில்லை.

அன்றிலிருந்து இன்று வரை, தமிழ்த் தேசிய அரசியல், வெறும் வாய்ச்சொல் அரசியலாகவே இருக்கிறது.

இதுதான், தமிழ்த் தேசிய அரசியலின் தோல்விக்கான அடிப்படைக் காரணங்களில் ஒன்று. தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகள், தேர்தலில் வெல்கிறார்கள்; ஆனால், தமிழ்த் தேசியமும் தமிழ் மக்களும் தோற்றுக்கொண்டே இருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய அரசியலின் இந்த நிலைதான், ஆதரவுத்தள அரசியலைச் செய்பவர்களுக்கும். அவர்கள், தாம் ‘அபிவிருத்தி அரசியல்’ செய்வதாகக் காட்டிக்கொண்டு, ‘ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை’ என்பது போல, உலா வந்துகொண்டிருக்கிறார்கள்.

தேசக்கட்டுமானம், உட்கட்மைப்பு அபிவிருத்தி, கல்வி, கலை, கலாசார மேம்பாடு, பொருளாதார அபிவிருத்தி என எவற்றிலும் அக்கறை கொள்ளாத தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் உள்ள ஊரிலே, அரசாங்கத்தின் அல்லது தேசியக் கட்சியின் ஆதரவில் இயங்குவதால், பத்துப் பேருக்கு வேலை வாங்கிக்கொடுக்கும், நான்கு வீதிகளுக்கு தார்போடும், மக்களுக்கு சைக்கிள், அடுப்பு, ஓட்டுக்கூரை வழங்கும், அந்நிய உதவியுடனான வீட்டுத்திட்டங்கள் மூலம் சிறிய வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் அரசியல்வாதிகள், ‘அபிவிருத்தி அரசியல்’ செய்வதைப் போன்ற மாயத்தோற்றத்தை உருவாக்குகிறார்கள்.

இந்த அபிவிருத்தி அரசியல்வாதிகளின் எழுச்சிக்கு, முக்கிய காரணமே தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் அலட்சியமும் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் பற்றிய அக்கறையற்ற அரசியலும்தான்.

எல்லாவற்றுக்கும் இந்தியாவே சரணாகதி என்று இருப்பதே, தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் வழக்கமாக உள்ளது.

குறைந்தபட்சம், இந்தியாவிடம் பேசியாவது, வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு இந்தியாவில் உற்பத்திசெய்யும் ‘கொவிட்-19’ தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுக்க முடிந்ததா? அதைக் கூடச் செய்ய முடியாவிட்டால், இந்தியாவுடனான உங்கள் சரணாகதி உறவின் அர்த்தம்தான் என்ன?

இது, ஓர் உதாரணம் மட்டும்தான். வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களின் தேவைகள் அதிகம். இலங்கையில் பொருளாதார ரீதியில் பின்தங்கிய இரண்டு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் அவர்கள்.

ஆகவே, தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் மக்கள் பிரதிநிதிகள், மிகுந்த இராஜதந்திரத்தோடு செயற்பட்டு, தமது மக்களின் தேவைகளை இனங்கண்டு நிறைவேற்ற வேண்டும்.

நீண்டகாலத்தில், அம்மக்களின் பொருளாதார மேம்பாடு, கல்வி, கலை, கலாசார மேன்மை, வேலைவாய்ப்பு, உற்பத்திப் பெருக்கம் ஆகியவற்றை விளைபயனாகத்தரும் செயற்றிட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும். அதுதான் தேசக்கட்டுமானத்தின் அடிப்படை.

தன் வாழ்நாள் முழுதும், கோமாளிக் கூத்தில் ஆடிய குதிரையை, திடீரென்று குதிரையோட்டத்தில் பங்கெடுக்கவைத்தால், அதனால் ஒருபோதும், குதிரைப் பந்தயத்தில் சாதிக்க முடியாது. அது கோமாளிக் கூத்துக்குப் பழக்கப்பட்ட குதிரை. அதன் இரத்தம், நாடி, நரம்பெங்கும் கோமாளிக் கூத்துத்தான் ஆழப்பதிந்திருக்கும்.

ஆகவே, குதிரைப் பந்தயத்துக்கு எனப் பழக்கப்பட்ட குதிரைதான் வேண்டும். இல்லையென்றால், புதிய குதிரைகள் அதற்கெனப் பழக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியலின் நிலையும் இதுதான். வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைப் போல, வெற்றுவாய்ஜால பகட்டாரவார அரசியல் செய்யும், தமிழ்த் தேசிய அரசியல் பாணியில் வளர்ந்த அரசியல்வாதிகளை, ஓய்வுக்கு அனுப்ப வேண்டிய கால கட்டம் வந்துவிட்டது.

தமிழ்த் தேசிய அரசியலுக்கு புதிய சிந்தனையும் தூரநோக்குப் பார்வையும் திட்டமிடலும் செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் திறனும் கல்வியறிவும் நிபுணத்துவமும் இராஜதந்திரமும் தமிழ் மக்களை உண்மையாக நேசிக்கும் தன்மையும் கொண்ட புதிய தலைமைகளுக்கான தேவை ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் இதனை உணராவிட்டால். தமிழ்த் தேசம், இனி மெல்லச் சாகும்.

---

## கழிதங்கள்

### பொலிஸாரின் ஆதரவுடன் சட்டவிரோத மணல் அகழ்வு

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மருதங்குளம், உடுபாற்றுக்கண்டல், உப்பாறு போன்ற பகுதிகளில் பொலிஸாரின் முழுமையான ஆதரவுடன், சட்ட விரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதாக விவசாயிகளும் பொதுமக்களும் குற்றம்சாட்டியுள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த மணல் அகழ்வுகள், பிரதேச செயலாளரின் முயற்சியால் இராணுவத்தினரின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இரணைமடுக் குளத்தை அண்டிய பகுதிகளில், சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்டு வந்த திருவையாறு பகுதியை சேர்ந்த டிப்பர் வாகனங்களும் உழவு இயந்திரங்களும், பொலிஸாரின் ஆதரவுடன் குறித்த பகுதிக்கு வந்து, சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றன.

குறிப்பாக, வயல் நிலங்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள், கழிவு வாய்க்கால்கள் என்பவற்றில் நாளாந்தம் 60 - 70 கியூப் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு, வெளி இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

தினமும் குறித்த பகுதிக்கு சிவில் உடைகளில் வரும் பொலிஸார், சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களிடம் சமரசம் பேசி விட்டு, சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் டிப்பர் வாகனங்களையும் உழவு இயந்திரங்களையும் பாதுகாப்பாக அனுப்பி விட்டுச் செல்கின்றனர் என்றும் விவசாயிகள், பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே, குறித்த பகுதியில் இராணுவத்தினரின் உதவியை கொண்டு, சட்டவிரோத மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்தி, தமது பயிர்செய்கை நிலங்களை பாதுகாக்க வேண்டும் என, பிரதேச விவசாயிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யதுபாஸ்கரன்



# எங்கே செல்கிறது இலங்கையின் பொருளாதாரம்?

ச.சேகர்

கொவிட்19- தொற்றுப் பரவல் இலங்கையில் இனங்காணப்பட்டது முதல் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது படிப்படியாக ஆரம்பமாகி தற்போதும் நீண்ட வண்ணமுள்ளது. ஆரம்பத்தில் வாகனங்கள், குளியலறை மற்றும் கழிவறை சாதனங்கள், தரைஓடுகள், மஞ்சள், உரம் போன்ற பொருட்கள் இவ்வாறானதடைக்குட்படுத்தப்பட்டிருந்தன.




சில பொருட்களின் இறக்குமதித் தடைக்கு, உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்படுவது தொடர்பில் மாற்றுக் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. சில பொருட்கள் இறக்குமதி காரணமாக அந்நியச் செலாவணி இருப்புக்கு நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் என காரணம் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரத்தின் பிற்பகுதியிலும் மேலும் 623 பொருட்கள் இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதாவது, பொருட்களை இறக்குமதி செய்கையில் குறிப்பிட்ட காலப்பகுதியில் மீளச் செலுத்துவது எனும் புரிந்துணர்வின் அடிப்படையில் வங்கியிடமிருந்து கடன் கடிதம் (LC) திறக்கப்பட்டு, பின்னர் அதை குறித்த இறக்குமதியாளர் மீளச் செலுத்துவார். இது பெரும்பாலும் குறித்த வாடிக்கையாளருக்கும், வங்கிக்குமிடையே காணப்படும் நல்லுறவின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். இதுவரை காலமும் இந்த வழமை பின்பற்றப்பட்டு வந்தது.


பேராசிரியர். டபிள்யு. லக்ஸ்மன்

ஆனாலும் தற்போதைய புதிய அறிவுறுத்தலின் பிரகாரம், இறக்குமதி செய்யும் பொருட்களுக்கான மொத்தப் பணத்தையும் வங்கிக்கு செலுத்தி கடன் கடிதத்தை (LC) திறக்க வேண்டியிருக்கும். இதிலுள்ள இரு விதமான சிக்கல் நிலைகள் காணப்படுகின்றன. இதுவரை காலமும் தமது வங்கியுடன் நல்லுறவைக் கட்டியெழுப்பியுள்ள இறக்குமதியாளர்கள் தாம் இறக்குமதி செய்ய எதிர்பார்க்கும் பொருட்களின் மொத்தப் பெறுமதியில் 50 சதவீதத்தை, 30 சதவீதத்தை போன்ற பகுதியளவு தொகையை வைப்புச் செய்தே ஆறு மாத காலப்பகுதிக்கு (180 நாட்களுக்கு) கடன் கடிதத்தை (LC) ஆரம்பித்திருந்தன. இதனால் அவர்கள் வைப்புச் செய்திருக்கும் தொகைக்கு வங்கியிடமிருந்து வட்டியும் வழங்கப்பட்டது. அதனூடாக இறக்குமதியாளருக்கு சிறு வருமானமும் கிடைத்தது. கடந்த வாரப் பிற்பகுதியில் வெளியாகியிருந்த மத்திய வங்கியின் அறிவித்தலின் பிரகாரம் தற்போது இந்த முறைமை இல்லாமல் செய்யப்பட்டுள்ளதால், இறக்குமதியாளர்கள் மொத்தத் தொகையையும் வேறொரு வழியில் திரட்ட வேண்டியிருக்கும். அது வெளியே வட்டிக்கு பணம் பெற்று வைப்புச் செய்வதாகக் கூட இருக்கலாம். இதனால் இறக்குமதியாளருக்கு தாம் வெளியே கடனாக பெறும் தொகைக்கும் வட்டி செலுத்த வேண்டும் என்பதுடன், ஆறு மாத காலப்பகுதிக்கு கடன் கடிதத்தில் வைப்புச் செய்திருக்கும் தொகைக்கு இதுவரை காலமும் வங்கியால் வழங்கப்பட்ட வட்டியும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

இதனால், இறக்குமதி செய்யும் பொருட்களின் அளவும் சுயமாக குறைவடையும். அரசாங்கத்தின் எதிர்பார்ப்பும் அதுவாகவே அமைந்திருக்கின்றது. வெளிப்படையாக கூறுவதானால், நாட்டுக்கு தற்போதைய அத்தியாவசிய மருந்துப் பொருட்கள், எரிபொருள், உணவுப்பொருட்கள்இறக்குமதிக்குக்கூட செலுத்துவதற்கு போதியளவு அந்நியச் செலாவணி இருப்பில் இல்லை. அல்லது நெருக்கடியான நிலை காணப்படுகின்றது எனக்கூறினால் அது தவறாகாது.

இவ்வாறிருக்கையில், இறக்குமதி குறைவதால் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு உள்நாட்டு சந்தையில் கேள்வி அதிகரிக்கும் போது அவற்றுக்கான தட்டுப்பாடு ஏற்படும், விலை அதிகரிக்கும். தற்போது உள்நாட்டு வாகன சந்தையில் அவ்வாறானதொரு நிலைமையை அவதானிக்க முடிகின்றது.

இறக்குமதிக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள பொருட்கள் அத்தியாவசியமற்றவை என அரசாங்கத்தினால் அல்லது மத்திய வங்கியினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதில் தொலைக்காட்சி, சலவை இயந்திரம், குளிர்சாதனப் பெட்டிகள், வாயு குளிரூட்டிகள், அலைபேசிகள், இனிப்புப் பண்டங்கள், வர்த்தக நாமம் பொறிக்கப்பட்ட உள்ளாடைகள் போன்ற பல அடங்கியுள்ளன.

இந்த இலத்திரனியல் சாதனங்களை எந்நாளும் நாட்டு மக்கள் கொள்வனவு செய்யாத போதிலும், அலைபேசிகள் கொள்வனவில் மக்கள் அதிகளவு ஈடுபடுகின்றனர் என்றால் அது பிழையாகாது. குறிப்பாக, நாட்டில் தற்போது பாடசாலைகள் இயங்கவில்லை, பெருமளவான தொழில் புரிவோர் தமது வீடுகளிலிருந்து பணி புரிகின்றனர். இவர்களுக்கு கையடக்க தொலைபேசி, கணனி, ஸ்மார்ட் தொலைக்காட்சி போன்றன தமது கடமைகளை நிறைவேற்ற உறுதுணையாக அமைந்துள்ளன. அத்துடன், வீடுகளில் பாதுகாப்பாக இருங்கள் என கொவிட்19- பரவலைக் காரணம் காண்பித்து, சுமார் ஒன்றறை வருட காலமாக மக்களைதமது வீடுகளுக்குள் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் நிலையில், தமது அன்புக்குரியவர்களுடன் தொடர்பை பேணவும், பொழுது போக்காக தொலைக்காட்சி பார்ப்பதிலும் பலரின் நாட்கள் கழிந்த வண்ணமுள்ளன.

குறிப்பாக நகர் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு கிராமத்திலுள்ளதைப் போன்று பெரிய தோட்டங்கள், வயல் வெளிகள் காணப்படுவதில்லை. அவர்களுக்கு அலைபேசியும், கணனியும், தொலைக்காட்சியுமே பணிக்கும், பொழுது போக்குக்கும் துணை. இவற்றை இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வியக்க வைக்குமளவுக்கு வளர்ந்துவிட்ட நிலையில் சொகுசு பண்டங்கள் என வரையறுப்பது முறையாகாது.

இந்நிலையில் இவ்வாறான பொருட்களை எதன் அடிப்படையில் தற்போதைய சூழலில் அத்தியாவசியமற்ற பொருட்கள் என அரசாங்கம் அல்லது மத்திய வங்கி வகைப்படுத்தியுள்ளது என்பது கேள்வியை தோற்றுவித்துள்ளது. இந்த அறிவித்தல் வெளியாகிய மறுநாளிலிருந்து சில முன்னணி ஒன்லைன் விற்பனைத் தளங்களில் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள அலைபேசிகளின் விலை 550,000 ரூபாயையும் தாண்டியுள்ளது. அதாவது இந்த அறிவித்தல் வரும் முன்னர் அதன் விலை 300,000 ரூபாய்க்கும் குறைவாகவே காணப்பட்டது. இதனால் பாதிக்கப்படுவது நுகர்வோர்களே.

கொவிட்19 தொற்றுப் பரவல் உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும், அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது கட்டுப்பாடுகளை தளர்த்தி வழமை போன்று இயங்க ஆரம்பித்துள்ளன. குறிப்பாக மேலேத்தேய நாடுகளில் நிலைமை வழமைக்கு திரும்பிய வண்ணமுள்ளது. தொழில்நுட்ப ரீதியில் நாளாந்தம் உலகம் முன்னேறிய வண்ணமுள்ளது.

இலங்கையில் இவ்வாறான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதால் உலக ஓட்டத்துக்கேற்ப இலங்கையில் வளர்ச்சியை எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், உலக சந்தையில் புதிய நவீன தயாரிப்புகள் அறிமுகம் செய்யப்பட்டு ஒரு சில வாரங்களில் இலங்கையில் கிடைக்கும் சூழல் இதுவரையில் இருந்தது. ஆனால் எதிர்காலத்தில் இந்த நிலை மாறும். இந்தக் கட்டுப்பாட்டின் காரணமாக நாட்டின் வளர்ச்சி ஸ்தம்பிக்கும். பொருளாதார வளர்ச்சியில் தொழில்நுட்பம், இலத்திரனியல் சாதனங்களின் பங்களிப்பு இன்றியமையாதது.

எனவே, இந்த அரசாங்களின் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குபவர்கள் ஏன் தூர நோக்கு சிந்தனையற்றவர்களாக இருக்கின்றனர் என எண்ணத் தோன்றுகின்றது. மனவிரக்தியில் தமது ஆளுநர் பதவியை இராஜினாமா செய்வதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர். டபிள்யு. லக்ஸ்மன் ஊடகவியலாளர்களுக்கான தமது இராஜினாமா பற்றி அறிவிக்கும் உரையில் தெரிவித்தார். அந்த உருக்கமான உரையின் பின்னணியில் மத்திய வங்கியின் தீர்மானங்களில் அரசியல் அழுத்தம் கொடுக்கப்படுவது புலனாகின்றது.

மத்திய வங்கியின் புதிய ஆளுநராக அஜித் நிவார்ட் கப்ரால் பதவியேற்கவுள்ளார் என்பது ஏறத்தாழ உறுதியாகியுள்ள நிலையில், அவரும் இதே நிலைப்பாட்டைக் கைக்கொள்வாரா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

மொத்தத்தில் இலங்கை பொருளாதாரத்தின் பயணம் என்பது மகிழ்ச்சிகரமானதாக இல்லை.


அஜித் நிவார்ட் கப்ரால்

புதுடெல்லி

12- 18வயதுக்கு இடைப்பட்டோருக்கு

# ஊசியில்லா கொரோனா மருந்து

ஜைடஸ் கெடில்லா நிறுவனத்தின் 'ஊசியில்லா கொரோனா' தடுப்பூசியான ஜைகோவ்-டி மருந்து ஒக்டோபர் முதல்வாரத்தில் இந்தியாவில் அறிமுகமாகலாம் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜைடஸ் கெடிலா நிறுவனம் தயாரித்துள்ள ஜைகோவ்-டி தடுப்பூசியை அவசரகாலத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள கடந்த மாதம் 20 ஆம் திகதி இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதியளித்தது.

ஜைகோவ்-டி தடுப்பூசி உலகிலேயே முதன்முதலாக பிளாஸ்மா டிஎன்ஏ




தடுப்பூசியாகும். கொரோனா வைரஸுக்குத் தடுப்பூசி இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவற்றில் பிளாஸ்மிட் டிஎன்ஏ தடுப்பூசி என்பது ஜைடஸ் கெடிலா நிறுவனத்துடையது மட்டும்தான்.

கொரோனாவுக்கு எதிராக இந்தத் தடுப்பூசி மனிதர்களுக்கு அதிக பாதுகாப்பும், திறன்மிக்கதாகச் செயல்படும் என ஆய்வில் தெரியவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

3 டோஸ்களைக் கொண்ட இந்தத் தடுப்பூசி, 28 மற்றும் 56 நாள்கள் இடைவெளியில் செலுத்த வேண்டும். 12 வயதுமுதல் 18 வயதுள்ள பிரிவினருக்காக இந்தத் தடுப்பூசி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜைடஸ் கெடில்லா நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் ஷர்வில் படேல் கூறுகையில் " செப்டம்பர் நடுப்பகுதியில் தடுப்பூசி விநியோகத்தை தொடங்கிவிடுவோம், ஒக்டோபர் முதல் வாரத்தில் இருந்து எங்கள் தடுப்பூசி கிடைக்கத் தொடங்கும் என்றார்.

திருவனந்தபுரம்

கோழிக்கோடு விமான விபத்துக்கு

# விமானியே காரணம்

ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து கேரளாவின் திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு 190 பயணிகளுடன் 2020 ஆண்டு ஓகஸ்ட் 7ஆம் திகதியன்று வந்த ஏர் இந்தியா விமானம் விமானம் விமான நிலையத்தில் தரையிறங்கிய போது விபத்துக்குள்ளானது.

விமானம் ஓடுதளத்தை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்து இரண்டாக உடைந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்தவர்களில் 2 விமானிகள் உள்பட 21 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், கோழிக்கோடு விமான



விபத்து குறித்து 'விமான விபத்துக்கான விசாரணை அமைப்பு' நடத்திய விசாரணை முடிவுக்கு வந்து அந்த விசாரணை அறிக்கை நேற்று முன்தினம் வெளியானது.

விமானத்தை தரையிறக்கும் போது நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை விமானி பின்பற்றாததே கோழிக்கோடு விமான விபத்து ஏற்பட காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை

# விஜய் என்ன சாதி?

சாதி என்பது இந்தியாவில் தலைவிரித்து ஆடும் ஒன்றாகும் இந்நிலையில், "விஜய் என்ன சாதி" என்பது தொடர்பில் இயக்குநர் எஸ்.ஏ. சந்திரசேகர் பகிரங்கமாக பேசியுள்ளார்.

ஒயிட் லேம்ப் புரொடக்சன்ஸ் தயாரிப்பில் அந்தோணிசாமி இயக்கத்தில் உருவாகியுள்ள படம் சாயம். விஜய் விஷ்வா கதாநாயகனாக நடித்துள்ள இந்தப் படத்தில் சைனி கதாநாயகியாக நடித்துள்ளார். சலீம் மற்றும் கிறிஸ்டோபர் ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்திற்கு நாக உதயன் இசையமைத்துள்ளார்.

படிக்கும் மாணவர்கள் மீது சாதி சாயம் பூசுவதால் அவன் வாழ்க்கையே எப்படி திசை மாறுகிறது என்பதை மையப்படுத்தி இந்தப்படம் உருவாகியுள்ளது.

இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னை சாலிகிராமத்தில் உள்ள பிரசாத் லேபில் நேற்று (12) நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட இயக்குனர் எஸ்.ஏ. சந்திரசேகர் பேசியதாவது:

மாணவர்களிடம் சாதி சாயம் பூசக்கூடாது என்பதை வலியுறுத்தும் விதமாக இந்தப் படம் எடுக்கப்பட்டுள்ளது. சமூகத்திற்குப் பயன் தரும் விதமான படங்களை எடுப்பவர்களை எனக்கு ரொம்பப் பிடிக்கும். சாதியை ஒழிப்பதற்கு நாம் நமது வாழ்க்கையில் பிராக்டிகலாக என்ன செய்திருக்கிறோம்?

என் மகன் விஜய்யைப் பள்ளியில் சேர்க்கும்போது



விண்ணப்பத்தில் மதம், சாதி என்கிற இடத்தில் தமிழன் என்று குறிப்பிட்டேன். முதலில் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். மகன் தமிழ்நாட்டில் தான் பிறந்தான். மொழி தமிழ். அதனால் தமிழன் என வைத்துள்ளேன் என்றேன். இல்லை முடியாது என்றார்கள். பள்ளியையே மூடும் அளவுக்குப் போராட்டம் நடத்துவேன் எனக் கூறியதும், பின் அமைதியாக ஒப்புக்கொண்டனர். அப்போதிருந்து விஜய்யின் சான்றிதழில் சாதி என்கிற இடத்தில் தமிழன் என்றுதான் தொடர்ந்து வருகிறது. சாதிக்கு நாம்தான் முக்கியத்துவம் கொடுக்கிறோம். நாம் நினைத்தால், இதுபோல பள்ளியில் சேர்க்கும்போதே சாதியைக் குறிப்பிடாமல் தவிர்த்தால் இன்னும் இருபது வருடங்களில் சாதி என்கிற ஒன்றே இல்லாமல் போய்விடும்.

நானும் எனது படங்களின் நாயகர்களுக்கு விஜய் என்றுதான் பெயர் வைப்பேன். அதனால் தான் எனது மகனுக்கும் விஜய் என பெயர் வைத்தேன். விஜய் என்று சொன்னாலே ஓர் அதிர்வு ஏற்படும். விஜய் என்றாலே வெற்றி என்றுதான் அர்த்தம். அந்த வெற்றி இவரோடு ஒட்டிக்கொள்ள வேண்டும் என்றும் தனதுரையில் குறிப்பிட்டார்.




தமிழ்நாடு

மகாகவி பாரதியாருக்கு

# தமிழ்நாட்டில் கௌரவம் கிடைக்கவேண்டும்



இலக்கிய ஆன்மிக, அரசியல் தளங்களில் மேற்கொண்ட சீர்திருத்த முயற்சிகளுக்காக மதிப்புடன் போற்றப்படுபவர். இத்தகைய மகாகவிக்கு தமிழ்நாட்டில் தேவையான கௌரவம் கிடைக்க வேண்டும் 'ஈஷா' அறக்கட்டளை நிறுவனர் ஜக்கி வாசுதேவ் தனது 'டுவிட்டர்' பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

மகாகவி பாரதியாரின் 100 ஆவது நினைவுதினம் நேற்றாகும் (12) இதையொட்டி, அவர் இட்டுள்ள பதிவில், அவருடைய கவிதைகளை தமிழ் மக்கள் மறுபடியும் பாட வேண்டும். எல்லா இடங்களிலும் அவர் கவிதைகள் ஒலிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தன் வாழ்நாள் சிறிதெனினும் ஆற்றல் வாய்ந்த விதத்தில் தாக்கம் ஏற்படுத்திய சுப்ரமணிய பாரதி, நவீன தமிழ் இலக்கியத்தின் குரலாகவும், முகமாகவும் ஆனவர். அளப்பரிய திறன் ஆகும் என்றும் தெரிவித்துள்ளார்.

யோகா என்பது ஒரு பயிற்சி அல்ல. அது ஒரு உள் அனுபவம். இந்த அனுபவத்தை பெறுவது எல்லா மனிதர்களுக்கும் சாத்தியம். ஒரு மனிதர் எந்த செயல் செய்தாலும் அதில் 'நான்' என்ற தன்மையை கரைத்து முழு ஈடுபாடாக செய்தால் இந்த யோகா அனுபவத்தை அடைய முடியும். இது தான் நன்மைக்கும், முன்னேற்றத்துக்கும் அடிப்படை. மனிதனின் முக்திக்கும் அடிப்படையாகும் எனத் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லி

காங்கிரஸ் – பா.ஜ.க

# ராகுல் போட்ட கணக்கு



காங்கிரஸ் கட்சி 70 ஆண்டுகளில் உருவாக்கியதை பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) கடந்த 7 ஆண்டுகளில் ஒவ்வொன்றையும் விற்றுவிட்டது என காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மாணவர் பிரிவான இந்திய தேசிய மாணவர் கூட்டமைப்பின் தேசிய செயற்குழுக் கூட்டம் புதுடெல்லியில் நேற்று முன்தினம் (11) நடந்தது.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் இருந்தபோது, பிரதமர் மன்மோகன் சிங்க ஆட்சியின்போது மும்பை தீவிரவாதத் தாக்குதல் நடந்தது. அந்தத் தாக்குதலுக்குப்பின் மண்மோகன் சிங்கை பலவீனமான பிரதமர் என்று ஊடகங்கள் விமர்சித்தன. ஆனால், புல்வாமா தாக்குதல் நடந்தபோது பிரதமர் மோடிக்கு எதிராக எந்த ஊடகமும் கேள்வி எழுப்பவில்லை என்றார்.

பா.ஜ.க தலைமையிலான அரசின் செயல்பாடுகள் குறித்து ஊடகங்கள் ஏதும் கேள்வி கேட்காமல் மௌனமாக இருக்கின்றன. ஆனால், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் தொடர்ந்தும் ஊடகங்கள் விமர்சித்தன. அதற்கு முரணாக ஊடகங்கள் இப்போது செயல்படுகின்றன.

மியான்மார்

இராணுவம் – கிளர்ச்சியாளர்கள் மோதல்

# 20 பேர் உயிரிழப்பு

மியான்மாரில் கடந்த பெப்ரவரி மாதம் ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவம், நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி உள்ளிட்ட முக்கிய தலைவர்களைக் கைது செய்து சிறை வைத்தது.

இதனையடுத்து இராணுவ ஆட்சிக்கு எதிராகவும், நாட்டில் ஜனநாயகத்தை மீட்டெடுக்க கோரியும், சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களை உடனடியாக விடுவிக்க வலியுறுத்தியும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.



இதேவேளை இராணுவ ஆட்சிக்கு எதிராகப் பல்வேறு கிளர்ச்சியாளர்கள் குழுக்களும் உருவாகியுள்ளன. இக்குழுக்களுக்கும், இராணுவத்திற்கும் இடையே அவ்வப்போது மோதல்கள் நடைபெற்று வருகிறன.

இந்நிலையில், மியான்மர் இராணுவத்திற்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நேற்று முன் தினம்(11) இடம்பெற்ற மோதலில் 20 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் பலர் காயமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஜேர்மனி

## 100% மறுசுழற்சி செய்யக் கூடிய BMW கார்

ஜேர்மனியின் முனிச் நகரில் புதிய தொழில் நுட்பங்களுடன் கூடிய சர்வதேச மின்சார கார்களின் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது.

இக்கண்காட்சியில் புகழ் பெற்ற பிஎம்டபிள்யூ நிறுவனமானது வித்தியாசமான கார் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இக்காரை பயன்பாட்டிற்கு பின் 100% மறு சுழற்சி செய்து வேறு பொருளாக மாற்ற முடியும் என இதை தயாரித்துள்ள அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட பொருட்களை வைத்தே இக்கார் உருவாக்கப்பட்டது என்பது இதன் மற்றொரு சிறப்பு. ஐ விஷன் சர்க்குலர் (*I vision circular*) என்ற இக் கார் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஈராக்

## ஈராக் விமான நிலையம் மீது தாக்குதல்

ஈராக்கில் செயல்பட்டு வரும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பை அழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் ஈடுபட்டு வருகிறன.

குறிப்பாக ஈராக்கின் குர்திஷ் மாகாணத்திலுள்ள எர்பிள் ( *Erbil*) சர்வதேச விமான நிலையத்திற்கு அருகே நேட்டோ படைகள் தங்களை நிலைநிறுத்தி வைத்துள்ளன.

இந்நிலையில், இவ்விமான நிலையத்தைக் குறிவைத்து நேற்று முன் தினம்(11) டிரோன் மூலம் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இத் தாக்குதலினால் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும், ஐ.எஸ். பயங்கரவாதிகள் அல்லது ஈரான் இத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்கா

## சாகா வரம் பெறத் துடிக்கும் ஜெஃப் பெசோஸ்

உலகப் பணக்காரர்களில் ஒருவரும், அமேசான் நிறுவனத்தின் ஸ்தாபகருமான ஜெஃப் பெசோஸ் (*Jeff Bezos* ) சாகா வரத்திற்கான ஆராய்ச்சியில் இறங்கியுள்ளார் என பிரபல ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது,

இதற்காக அவர் அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல ஆராய்ச்சி நிறுவனமான அல்டொாஸ் லப்ஸில்( *Altos Labs*) பல கோடிகளை முதலீடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதர்கள் சாகாமல் எப்போதும் இளமையாகவே இருக்க வைப்பதற்கான ஆராய்ச்சிகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. பொதுவாக மனிதர்களுக்கு உடலில் இருக்கும் செல்கள் வளர்ந்து அது பெரிதாகிப் பல பிரிவுகளாகப் பிரிந்து அந்த செல்களும் வளர்ந்து பின் அது செயல் இழந்து இறந்து மடியும்.

ஒருவேளை இச் செல்களை வயதாக விடாமல், இளைமையாகவே வைத்து இருந்தால் எப்படி இருக்கும். என்பதைக் கேட்பதற்கு மிகவும் எளிது என்றாலும், இதைச் சாதிப்பது என்பது அவ்வளவு எளிது கிடையாது.



முதலில் விலங்குகளில் இருக்கும் செல்களை இதுபோல புதுப்பித்து மீண்டும் உயிர்பெற வைக்கும் ஆராய்ச்சிகளைச் செய்ய வேண்டும். அதில் பின்விளைவுகள் ஏதும் இல்லை என்றால் மட்டுமே நாம் அதை மனித உடல்களில் செயல்படுத்த முடியும்.

இவ் ஆராய்ச்சியைத் தான் தற்போது அட்லாஸ் லேப் நிறுவனம் செய்து வருகிறது. ஏற்கனவே யூனிட்டி டெக்னலாஜி என்ற நிறுவனத்தில் இதேபோல் *Jeff Bezos* சாகா வரம் குறித்த ஆராய்ச்சிக்கு முதலீடு செய்துள்ளார்.

உலக பணக்காரர் வரிசையில், கடந்த ஓகஸ்ட் மாதம் வெளியிட்ட தகவலின் படி ஜெஃப் பெசோஸ் 192.8 பில்லியன் அமெரிக்க டொலருடன் இரண்டாம் இடத்தில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒஸ்திரியா

## தாயின் சடலத்தை காட்டி ஓய்வூதியம்

ஒஸ்திரியா நாட்டின் மேற்கு டைரோல் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர், கடந்த ஆண்டு இயற்கை மரணம் எய்திய தனது 89 வயதான தாயின் சடலத்தை பாதாள அறையில் மறைத்து வைத்திருந்த சம்பவமொன்று அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

66 வயதான குறித்த நபர் தனது வீட்டின் பாதாள அறையில் அவரது தாயின் உடலை ஐஸ்கட்டிகள் மற்றும் பண்டேஜ்களை வைத்து பாதுகாத்து, துர்நாற்றம் வராமல் தடுத்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் புதிதாக அப் பகுதியில் வேலையில் இணைந்த தபாற்காரர் ஒருவர் ஓய்வூதியம் பெறும் குறித்த நபரின் தாயாரை நேரில் பார்க்க வேண்டும் என்று கூறியதாகவும், அதனை அவர் மறுத்து விட்டதால் சந்தேகமடைந்த அவர் பொலிஸாரிடம் தெரியப்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து அவரது வீட்டிற்கு விசாரணை நடத்த பொலிஸார் வந்த போதே இச்சம்பவம் வெளிச்சத்துக்குள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் தனது தாயின் ஓய்வூதியப்பணத்தைப் பெறுவதற்காகவே இவ்வாறு செய்துள்ளார் எனவும், இதுவரை சுமார் 50 ஆயிரம் யூரோக்களுக்கு மேற்பட்ட தொகையை அவர் பெற்றுள்ளார் எனவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.




ஆப்கானிஸ்தான்

காபூலுக்கான விமான சேவையை

## பாக். இன்று தொடங்கும்

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதையடுத்து தலிபான்கள் உடனான அரசியல் சிக்கல்கள் காரணமாக, உலக நாடுகள் ஆப்கானிஸ்தானுக்கான விமானப் போக்குவரத்தை இடை நிறுத்தி வைத்துள்ளன.

இந்நிலையில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இருந்து ஆப்கானிஸ்தானின் காபூல் நகருக்கு இன்று முதல் விமான சேவையைத் தொடங்க உள்ளதாக பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.



இவ்விமான சேவைக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்து விட்டதாக பாகிஸ்தான் பன்னாட்டு விமான நிறுவனத்தின் செய்தித்தொடர்பாளர் அப்துல்லா ஹபீஸ் கான் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் 5 தசாப்த காத்திருப்பு

# சம்பியனானார் எம்மா ராடுகானு

### 'எம்மாவின் திறமையில் சந்கேமில்லை" எலிசபத் மகாராணி வாழ்த்து

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெற்றுவரும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டெனிஸ் போட்டிகளின் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் வெற்றிபெற்ற பிரித்தானியாவின் எம்மா ராடுகானு, சம்பியன் பட்டத்தை வென்றார்.



பிரித்தானியாவைச் சேர்ந்த வீராங்கனையொருவர் அமெரிக்க ஓபன் டெனிஸ் போட்டியில் 53ஆண்டுகளுக்குப் பின்னர் பட்டம் வென்றுள்ளார் என்பது விசேட அம்சமாகும்.

மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் கனடாவின் லேலா பெர்னான்டஸை 6-4, 6-3 என்ற நேர் செட்களில் தோற்கடித்து சாம்பியன் பட்டத்தை எம்மா ராடுகானு வென்றுள்ளார்.

சம்பியன் பட்டம் வென்ற எம்மா ராடுகானுவுக்கு பிரித்தானிய மகாராணி எலிசபெத் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் " எம்மா ராடுகானுவின் கடின உழைப்பு, அர்ப்பணிப்புக்கு கிடைத்த வெற்றிதான் சாம்பியன் பட்டம். என்னுடைய வாழ்த்துகளை எம்மா ராடுகானுவுக்குத் தெரிவிக்கிறேன். இளம் வயதில் மிகச்சிறந்த சாதனையை எம்மா ராடுகானு செய்துள்ளார். உங்களின் திறமையில் எனக்கு துளியும் சந்தேகமில்லை. உங்களுடன் மோதிய பெர்னான்டஸ் எதிர்கால தலைமுறையினருக்கு தூண்டுகோலாக இருப்பார்" எனத் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமின்றி கடந்த 44 ஆண்டுகளில் பிரித்தானியாவைச் சேர்ந்த வீராங்கனையொருவர் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றதும் இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

கடைசியாக கடந்த 1977ஆம் ஆண்டு விர்ஜினா வேட் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றபின்னர் இப்போது எம்மா ராடுகானு வென்றுள்ளார்.

இதேவேளை, இன்று இடம்பெறவுள்ள ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் உலகத் தரவரிசையில் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நொவெக் ஜகோவிச் மற்றும் 2ஆம் நிலை வீரரான ரஷ்யாவின் டேனில் மெட்வதேவ் ஆகியோர் மோதவுள்ளனர்.

டி20 உலகக் கிண்ணத் தொடருக்கான

## இலங்கை அணி அறிவிப்பு

இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடருக்கான 15 வீரர்கள் கொண்ட இலங்கை அணியை ஸ்ரீ லங்கா கிரிக்கெட் அறிவித்துள்ளது.

உலகக் கிண்ண தொடர் ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமானில் ஒக்டோபர் 17ஆம் திகதி முதல் நவம்பர் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை அணி டி20 உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் 15 வீரர்கள் கொண்ட அணியை நேற்று அறிவித்துள்ளது. இந்தத் தொடரில் இலங்கை அணி நேரடியாக சூப்பர் 12 சுற்றுக்குள் செல்லாமல் தகுதிச்சுற்று அடிப்படையில் செல்கிறது.

தகுதிச்சுற்றில் குழு-ஏ பிரிவில் நபியா, நெதர்லாந்து, அயர்லாந்து அணிகளுடன் இலங்கை இடம் பெற்றுள்ளது. இந்த பிரிவில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் சூப்பர் 12 சுற்றுக்கு தகுதி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணி விவரம்:

டசுன் சானக (தலைவர்), தனஞ்சய டி சில்வா (உப தலைவர்), அவிஷ்க பெர்னான்டோ, சரித் அசலங்க, பானுக ராஜபக்ஷ, கமிந்து மெண்டிஸ், குஷால் பெரேரா, தினேஷ் சந்திமால், வனிந்து ஹசரங்க, சாமிக கருணாரத்ன, லஹிரு மதுசங்க, துஷ்மந்த சமீர, நுவான் பிரதீப், மகேஷ் தீக்சன, பிரவீன் ஜெயவிக்ரம.

மேலதிக வீரர்கள்: லஹிரு குமார, புலின தரங்க, பினுர பெர்னான்டோ, அகில தனஞ்சய.




ஐ.பி.எல் தொடரிலிருந்து

## இங்கிலாந்து வீரர்கள் மூவர் விலகல்



இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்களான ஜொனி பேர்ஸ்டோ (ஹைதராபாத் சன்ரைசர்ஸ்), 20க்கு இருபது கிரிக்கெட்டின் முதல்நிலை துடுப்பாட்ட வீரர் டேவிட் மலான் (பஞ்சாப் கிங்ஸ்), கிறிஸ் வோக்ஸ் (டெல்லி கேப்பிட்டல்ஸ்) ஆகியோர் சொந்த காரணங்களுக்காக எதிர்வரும் 19ஆம் திகதி ஐக்கிய அரபு அமீரகத்தில் ஆரம்பிக்கும் ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர்.

தனிப்பட்ட காரணங்களுக்காக எஞ்சிய ஐ.பி.எல் தொடரில் இருந்து விலகுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், அமீரகத்தில் 6 நாட்கள் கட்டாயம் தனிமைப்படுத்தலை கடைபிடிக்க வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் சபை திடீரென கடுமையான உத்தரவை பிறப்பித்திருப்பது அவர்களை பாதித்து இருப்பதாக கிரிக்கெட் சபையின் சிரேஷ்ட நிர்வாகியொருவர் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் இத்தகைய தனிமைப்படுத்துதல் அவசியம் இல்லை என்று கூறப்பட்டு இருந்தாலும் தற்போது இந்திய அணியின் பயிற்சி குழுவினர் கொரோனாவால் பாதிக்கப்பட்டதால் இந்திய கிரிக்கெட் சபை தனது முடிவை மாற்றியுள்ளது. ஏற்கெனவே ஜோஸ் பட்லர், பென் ஸ்டோக்ஸ், ஜோப்ரா ஆர்ச்சர் ஆகிய இங்கிலாந்து நட்சத்திர வீரர்கள் ஒதுங்கிய நிலையில், மேலும் 3 முன்னணி வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் இருந்து பின்வாங்கி இருப்பது சம்பந்தப்பட்ட அணிகளுக்கு பின்னடைவாக கருதப்படுகிறது.

பஞ்சாப் அணி டேவிட் மலானுக்கு பதிலாக தென்ஆப்பிரிக்க வீரர் எய்டன் மார்க்ராமை ஒப்பந்தம் செய்துள்ளது.

மன்செஸ்டர் திரும்பியதும்

## ரொனால்டோ அசத்தல்

### முதல் போட்டியிலேயே 2 கோல்

உலகின் தலைசிறந்த கால்பந்து வீரரான போர்த்துக்கல் நாட்டின் கிறிஸ்டியானோ ரொனால்டோ, மன்செஸ்டர் யுனைட்டெட் கழகத்துக்காக தான் விளையாடிய முதல் போட்டியிலேயே இரண்டு கோல்களை அடித்து அசத்தியுள்ளார்.

கடந்த 2003ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை மன்செஸ்டர் யுனைட்டெட் அணிக்காக ரொனால்டோ விளையாடினார். பின்னர், ரியல் மற்றிட் அணிக்கு மாறி அந்த அணிக்காக சுமார் 9 ஆண்டுகள் விளையாடிய அவர், யுவெண்டர்ஸ் அணிக்கு சென்றார்.

தற்போது மீண்டும் மன்செஸ்டர் யுனைட்டெட் அணிக்கு திரும்பியுள்ள ரொனால்டோ, நேற்று முன்தினம் நியூ கேஸ்டில் அணிக்கெதிராக முதன்முறையாக களம் இறங்கினார்.

முதல் போட்டியிலேயே இரண்டு கோல்கள் அடித்து ரொனால்டோ அசத்திய நிலையில், மன்செஸ்டர் யுனைட்டெட் 4-1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 13 செப்டெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.